# "நாம தேவர்!!!!!!





பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# “நாம தேவர்”

# பொருளடக்கம்


1. நாமதேவர்----------------------------------------------------------1

௨. ஓர் பூனையின் கதை----------------------------------------------௨7

௩. ஓர் உண்மை-----------------------------------------------------௪௪

௪. திரு அண்ணாமலை-------------------------------------------------௪6

5 இறை நிலையும் குரு நிலையும்-----------------------------------5௨

6. இரும்பு ஊசியும் தங்க ஊசியும்-----------------------------------85


எல்லாம் நீ!



ஸத்தியம் பேசு. **ஓம்** (ஸத்தியவாக்கை) தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்"

# "ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம், ஓம்"

# "அகம்பிரம்மம், ஜகம்பிரம்மம்"

# "அகமே எல்லாம்"!!!

# "ஜகம், பரமும், ஜீவர்களும்"

# "சிறிதும் இல்லை"!!!

அன்பும், அறிவும், ஆர்வமும், ஆனந்தமும்,
இனிமையும், இரக்கமும் ஈர்ப்பும், ஈகையும்,
உண்மையும், உயர்வும், ஊக்கமும், ஊன்றுதலும்,
எளிமையும், எண்ணமும், ஏக்கமும், ஏகாந்தமும்,
ஐயமின்மையும், ஐக்கியமும், ஒன்றுதலும்,
ஒன்றென்பதும், ஓதுதலும், ஓம் காரமாயும்,
ஔஷதமாயும், ஔவையின் நெறியும்,
ஃ தொன்றையும் ஃ தீதில்லாததாயும். அனைத்தும்
ஒருங்கே அமைந்த "**ஆனந்தாஸ்ரம**"



உ

"ஆனந்தகுழந்தை"களாய்,
எம் தவசீலனையும் எம் சத்புத்திரனையும்,
உங்கள் அனைவரின் "ஸத்குருவான
எம் "ஸத் ஸித் ஆனந்தா
வின் உத்தம "கண்மணிகளே"!!!
"எம்குழந்தைகளே"! உங்கள் அனைவரை
யும், எம் ஸ்ரீமாதாபிதாவாக ஆக்கிக் கொண்டு, உங்கள் பாதம்
பணிந்து, உங்கள் "ஸ்ரீபாததூளியை"!
எம் சிரமேல் தாங்கி எழுந்து, உங்கள் அனைவரையும் எம்
செல்ல மழலைகளாக்கி, உங்களை அன்புடன் வாரியெடுத்து,
எம் மடிமீதிருத்திக்கொண்டு, உச்சிமோந்து முத்தமிட்டு,
"ஸர்வாத்ம ஸ்வயஞான பீட சித்திரஸ்து"! என வாழ்த்தி
ஆசிகூறுகிறோம்.

"அடங்கி" நடந்தால் ஆத்மானந்தம் பெறுவீர்கள்.
"அடக்க" எண்ணிடவோ, பிறரை "அடக்கி"
பேசிடவோ, பிறரிடம் "அதிகாரம்" செலுத்திடவோ,
உடல், உலக, இன்ப துன்பமும், சொந்த பந்த பாச உறவு என்னும்,
ஜனனமரணமென்னும் வலைப்பின்னலில் என ஸ்ரீமஹான்களின்
அனுபவமாகும். ஆனால் "எம்குழந்தைகள்" அனைவரும்
அடங்கிய குழந்தைகளே. இது பிரமாண உண்மையாகும்!



உ

ஓம் அரும் தவத்திலுதித்த, அருமை செல்வங்களான, ஞானசீலர்களான, "எம் ஆனந்தாஸ் ரம ஆனந்த" குழந்தைகளே! நீங்கள் அனைவரும் கருத்துள்ள கதை கேட்கும் எம் செல்வக் குழந்தைகள். உங்கள் அனைவரையும் கதை சொல்லியே "ஹரிதுயில்" (தூங்காமல் தூங்கும் தூக்கம்! அதாவது பிரேமையின் பேரானந்த உறக்கம்) கொள்ளச் செய்வோம். இதில் "கதையை மறந்து கருத்தை மட்டும்" சுவைத்து ஆனந்தம் எய்த உங்கள் பாதம் பற்றி பணிவாக வேண்டுகிறோம்!

# "நாம தேவர்!!!!!!"

பூலோக வைகுண்டமாம் பண்டரி க்ஷேத்திரத்தில், தையல் தைக்கும் தொழிலாளியாக, ஓர் சிறந்த பக்தர் இருந்தார். அவர் தினமும் தம் வருமானத்தில், தளிகை செய்து, ஸ்ரீ பாண்டுரங்கனுக்கு நிவேதனம் செய்து, அதை அங்குள்ள ஏழை எளிய ஜனங்களுக்கு விநியோகம் செய்து வந்தார். அந்த பாண்டுரங்கனை "விட்டல்" என்றும், "விடோபா" என்றும், "ரங்கன்" என்றும், "பண்டரிநாதன்" என்றும், இன்னும் பலவிதமாக அழைப்பதுண்டு! இந்த உத்தம பக்தரான தையல் தொழிலாளியின் நாமம் "தாம்சேஷ்டி"! அவருடைய தர்ம பத்தினியின் நாமம் "குணைபாய்"! (குணையி என்றும் அழைப்பதுண்டு.) இத்தம்பதியினருக்கு புத்திர சந்தானம் இல்லை!



உ

வைகுண்டத்தில் ஸ்ரீபகவான், அன்பர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது, "உத்தவர்" என்னும், மஹாயோகியாயும், திடஞானியாயும் உள்ள ஓர் மஹானை விளித்து, ஹே அன்ப! நீ போய் பூலோகத்தில் திருஅவதாரம் எடுத்து, கர்மா, பக்தி, யோகம், ஞானம் இவைகளை முறையோடு போதித்து, "ஜீவ உத்தாரணம்" செய்யக் கடவாய் என ஆக்ஞாபித்தார் ஸ்ரீபகவான்.

அதற்கு அந்த ஸ்ரீமஹானை உத்தவர், பயந்து ஆடிப் போய், ஹே பிரபோ! "இது கலியுகமாயிற்றே"! இக்காலத்தில், ஜீவ உத்தாரணம், அத்தனை எளிதல்லவே! என தயக்கத்துடன் சற்று மறுத்து கூறினார்.

ஸ்ரீபகவானும் சிரித்துக் கொண்டே அன்பனே! உத்தவா! கவலை பயம், வேண்டாம். யாம் உன்னுடன் இருந்து கொண்டே உன்னை வழிநடத்துவோம். "நாம் இருவரும் இணைந்தே" இக்காரியம் செய்வோம், என சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர் உத்தவரை!

ஓர் புண்ணிய தினத்தன்று, ஸ்ரீ உத்தவர் யாம் கர்ப்பவாசம் செய்யோம், எனச் சொல்லி ஓர் சிசுவாகமாறி, ஓர் தாமரை இலையில் மிதந்த வண்ணம், இந்த தாம சேஷ்டி சந்திரபாகா நதியில் ஸ்நானம் செய்யும் இடம் சமீபமாக மிதந்து வந்தனர்.

காரணம்?

கர்ப்பவாசம் :- புழுக்களோடு புழுவாய் நெளிந்து, கும்பீபாக நரகம் போல் அந்த துர்நாற்றத்தில் 10 மாதம் வாசம் செய்வது மஹா, மஹா, மஹா "வேதனை"!

சேனியும், தாய்ப்பாலும் :- பூர்வஜன்ம வாஸனையை மறக்கடிப்பது. சிறிது காலம் இறைவனோடு சம்பாஷணை செய்து இவ்விளக்கம் பெறுவதை மறக்கடிப்பது. இவை "கர்ப்ப வாஸனையால்" நடைபெறும் கொடுமையாகும்.



## ௨

இதை அறிந்த உத்தவர், கர்ப்ப வாஸம் செய்யாமல் தாமரை இலையில் மிதந்து வந்தார். ஆனால் நம் "கபட நாடக சூத்திரதாரியான" எம் ஸ்ரீபகவான் தாம் சேஷ்டி அருகில் வரும் போதே, தாமரை இலையை சற்று அகற்றி விட்டு, அக்குழந்தையை ஜலத்தில் அமிழச் செய்தார். அவ்வளவுதான், அக்குழந்தையின் வாயின் வழியாயும், மூக்கின் வழியாயும், ஜலம் உள்ளே புகுந்தது.

1. அக்குழந்தை பிராண அவஸ்தையினால் துடித்தது!
௨. பூர்வ வாஸனை மறக்கடிக்கப்பட்டது!!
௩. தான் வந்த காரியத்தையும் மறந்தது!!!
௪. அப்போது பிறந்த குழந்தையின் நிலைக்கு வந்து விட்டது!!!!

## "இது எம் ஐயனின் கருணையாகும்!"

1. நாம் ஓர் ஜீவன் என்ற நிலைக்கு வந்து விட்டது!
௨. நாம் இன்னார் என்ற கர்வம் அழிக்கப்படுகிறது!!
௩. நிலை கண்டு பக்குவப்படுத்த வேண்டும் என்ற நிலைக்கு வந்தது!!!
௪. உலகோர் தம்மை ஓர் மஹானாக மதிக்க வேண்டாம் என்ற நிலை!!!!

இதுவே ஸ்ரீபகவானின் **"அறக் கருணையாகும்"!!**

எம் அன்புச் செல்வங்களே!

இப்போது அக்குழந்தை சாமான்ய குழந்தை ஆகி விட்டதால், குவா! குவா! குவா! என தன் பிராணனுக்காக கதற ஆரம்பித்தது. உடனே நம் தாம் சேஷ்டியும் பதறிப்போய், அக்குழந்தையை கரத்தில் தாங்கினார். அது அதிகாலை நேரம் ஆனதால், அதை எவருக்கும் தெரியாமல், தன் வீடு வந்து சேர்த்தார். குணாயிக்கு அளவற்ற ஆனந்தம். ஸ்ரீ பகவான் கருணையினால், அவள் கொங்கையில் பால் சுரந்தது. அக்குழந்தைக்கு அமுது ஊட்டினாள். அக்குழந்தை ஓர் சாமான்ய குழந்தையாகி வளர்ந்தான். அதற்கு இருவரும் சேர்ந்து, **"நாம தேவ்"!** என நாமகரணம் சூட்டினர்.



உ

அந்த அன்னையும் தந்தையும் தன் குழந்தையை அன்புடன் "அடே நாமா"!!! என செல்லமாக அழைப்பார்கள். இப்போது "நம் நாமதேவுக்கு ஆறு வயதாகி விட்டது." அது விளையாட்டுப் பருவம். படுசுட்டியாக திரிந்தான் நம் நாமா! தம் தந்தை தினமும் ஆலயம் செல்வதையும், பூஜை முடிந்து வெறும் தட்டை கொண்டு வருவதையும், கவனித்த நம் நாமதேவ். "ஓஹோ! ஸ்வாமி அனைத்தையும் மிச்சம் இல்லாமல் சாப்பிடுகிறார்." என முழுமையாக "நம்பினான்" நம் நாமதேவ்!

ஓர் நாள் தந்தை வெளியூர் செல்ல வேண்டியதிருந்ததால், தம் மனைவியை அழைத்து, இன்று நம் மகன் நாமாவை, ஸ்வாமிக்கு நிவேதனம் செய்யச் சொல் எனப் பணித்து சென்று விட்டார். எப்போதும் போல் குணாயீ சில பக்ஷணங்கள், சாதம், இவைகளை ஓர் தட்டத்தில் இட்டு, ஓர் துணி கொண்டு அதை மூடி, தம் மகனைப் பார்த்து, அடே நாமா! இன்று உன் தந்தை இல்லாததால், இக்கைங்கர்யத்தை, நீ சிறப்புடன் செய்து வா, எனப் பணித்தாள், தாய் குணாயீ!

நாமதேவ் விளையாட்டுப் பிள்ளைதானே? இருந்தாலும் தம் தாயிடம், தட்டை அதி பவ்யமாக வாங்கி, தோளில் வைத்துக் கொண்டு, இருகரம் கொண்டு தட்டை தாங்கியவண்ணம், மெதுவாக வீதியில் நடந்து கொண்டிருந்தான். வீதியில் செல்லும் போது, நாமதேவுடைய சகதோழர்கள், பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் நாமதேவையும் பந்து விளையாட அழைத்தனர்.

நண்பன்:- அடே நாமா! பெரியபட்டராட்டமா, பூஜை தட்டு, மடிசஞ்சி வேட்டி, பட்டுதுப்பட்டா, நெற்றியில் புண்டரம், உடலில் சந்தனம், இதென்னடா வேஷம்? அந்த தட்டை அப்படி ஓரமாக வை. எங்களுடன் வந்து பந்தாடு. பின் கோயிலுக்கு செல்லவாம். அந்த கல்சாமி ஒண்ணும் எங்கேயும் ஓடிப் போவாது. வாடா வா!



௨

நாமதேவர்:— போங்கடா போங்க! நான் அங்கு வந்தா பிரசாதம் அசுசையாப் போயிடும். எங்கம்மா திட்டுவா! எங்கப்பன் முரட்டுக் கோபி. விஷயம் தெரிந்தால் எங்கப்பா என்னை இரண்டு துண்டாக வெட்டிப் போடுவாரு. ஆகவே நான் வரலை. பூஜையை முடித்துவிட்டு அப்புறமா வர்ரேன்.

நண்பன்:— அடே நாமா! உன் பேச்சை நாங்கள் கேட்க மாட்டோம். நீதான் எங்கள் பேச்சைக் கேட்கணும். நீ இப்போது வருகிறாயா? இல்லையா?

நாமதேவர்:— இப்போ வர முடியாது! போங்கடா போக்கிரிப் பசங்களா! சாமியை விட விளையாட்டு முக்கியமல்ல!

என சொல்லிவிட்டு, விறுவிறு என நடந்தார் நாமதேவர். உடனே அக்கூட்டத்தில் ஒருவன், பந்தை நாமதேவருக்கு நேராக வீசி அடித்தான். அவன் அடித்த பந்து, நாமதேவரின் பூஜா தட்டு மீது விழுந்து, மூடி இருந்த துணியை கீழே தள்ளி விட்டது. ஆனால் தட்டும் கீழே விழவில்லை. நிவேதனமும் பாழாகவில்லை. ஆனாலும் நாமதேவருக்கு ஆத்திரம் தாங்கவில்லை. உடனே பூஜை தட்டை ஓர் ஓரமாக திண்ணையில் வைத்துவிட்டு, அந்த துணியை எடுத்து உதறி தட்டை மூடிவிட்டு, அரக்கர் கூட்டத்தில் புகுந்த ஆஞ்சநேயர் போல், அக்கூட்டத்தில் பாய்ந்து, பலரையும் இவர் ஒருவரே அடித்து, அவர்கள் அலறி ஓடும்படியாக செய்து கொண்டிருக்கும் போது, தாயார் இக்காட்சியை கண்டு கொண்டாள். கையில் ஓர் கோலெடுத்துக் கொண்டே நாமதேவரை திட்டிக் கொண்டே அடிக்க ஓடிவர, நாமதேவரும் அவசர அவசரமாக தன் அங்கவஸ்திரம், துண்டு, உடல் இவைகளின் தூசியை தட்டிவிட்டுக் கொண்டு, பூஜைத் தட்டையும் மூடிக் கொண்டு, பூஜைத் தட்டுடன் கோயிலுக்கு, ஒரே ஓட்டமாக ஓடிவிட்டார். அப்பாடா! இந்த பசங்க தொல்லை தாள முடியலை. அதைவிட இந்த அம்மா தொல்லை, அதைவிட மோசம் என சொல்லிக் கொண்டே பூஜைத் தட்டுடன் ஆலயம் வந்து, ஸ்வாமி முன் வைத்து அப்பாடா என்றார்.



உ

எம் செல்வக் கண்மணிகளே! அனைத்தையும் ஸ்வாமி முன் வைத்துவிட்டு, ஓர் செங்கல் மீது "சமசரணமாக" நின்றுகொண்டு "உங்கள் கர்மா எல்லாம் முடித்துவிட்டு வந்தால் போதும். உங்களுக்காகவே எத்தனை காலமானாலும், யாம் "காத்துக்கொண்டிருப்போம்!!"

"ஸ்வாமி நமக்காக காத்துக் கொண்டிருக்கிறோனே" என்று, "பதட்டமோ! கவலையோ!! அவசரமோ!!! வேண்டாம்! "அறியாமையின் குழந்தைகளுக்காக, அறிவுள்ள அப்பன் காத்து இருப்பதில் எந்த தவறும் இல்லை" உங்களை மயக்கும் "எம் திருஷ்டி அப்படி" இருக்கிறது! "உங்களை மயக்கிய மனம்"! இப்படி அமைந்துவிட்டதென ஆசுவாசப்படுத்திக் கொண்டிருக்கும் எமதையன், "விட்டல்" (நாமரூப குணதோஷங்களை விட்டால் நீங்களும் விட்டல் ஆக முடியும்) தம் உத்தவர் அம்சமான நாமதேவை, அவர் நோக்கா வண்ணம், தாம் நோக்கிய வண்ணம், அமைதியின் ஆனந்தமாக பார்த்துக் கொண்டிருந்தான், எம் பாண்டுரங்கன்!

நம் நாமதேவரும், அன்றுதான் "முதன் முதலாக" ஸ்வாமியைக் காண்பதால், வைத்த கண் மாறாமல், உற்று நோக்கி, உச்சி முதல் பாதம் வரை, ஊடுருவி பார்த்து விட்டு, இவ்வார்த்தைகளாடினார். அதாவது?



உ

நாமதேவ் :— என்ன பாண்டுரங்கா! நவமாக இருக்கிறாயா? எங்கப்பா தினமும் கொண்டு வந்து கொடுக்கும் ஆகாரங்களை மிச்சம் மீதி இல்லாமல் சாப்பிட்டு விடுகிறாயே? அப்படி சாப்பிட்டும் உன் உடல் "பருக்கவில்லையே"!!! என்ன இடமெலிவாகத்தானே இருக்கிறாய்? உன் அருகே வேறு எவரையும் காணவில்லையே? அப்படி எவராவது இருந்தால் அவர்களும் உன் ஆகாரத்தை பங்கு போட வேண்டி வரும். அப்படி யாரும் இல்லையே? பின் ஏன் இப்படி மெலிந்து காணப்படுகிறாய்? சரி சரி, இன்று நான் கொடுக்கும் பழங்கள், விதவிதமான உணவுகளை, சாப்பிட்டபிறகாவது, "சற்று குண்டாக" வேண்டும். சரி இன்று இதை மட்டும் சாப்பிடு, நாளை முதல் எம் அம்மாவிடம் சொல்லி விதவிதமான பதார்த்தங்கள் கொண்டு வருகிறேன், எனச் சொல்லி விட்டு, கதவு ஓரமாக, ஸ்வாமியை காணாத நிலையில் தன் மோவாய் கட்டையில், இரு கைகளையும் ஊன்றிய வண்ணம், அமர்ந்து கொண்டார் நாமதேவ். பெரியவர்கள் சாப்பிடும் போது, பிறர் காணலாகாது என்ற, "மேதுரை மரியாதை" என்ற நிலையில் அமர்ந்துவிட்டார்.

பத்து நிமிஷம் கழித்துப் பார்த்தார். நிவேதனம் அப்படியே இருந்தது. ஸ்வாமியும் அப்படியே நின்றிருந்தார். நம் நாமதேவுக்கு ஒன்றும் புரியவில்லை. "சற்று ஆத்திரம் வந்தது". என்ன பாண்டுரங்கா! பிடிவாதமா? எங்கப்பா கொடுத்தால் சாப்பிடுகிறாய்! நான் கொடுத்தால் சாப்பிடக்கூடாதா? சிறுபிள்ளை என்று என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா? அல்லது என் நண்பர்கள் வீசிய பந்து, இதில் பட்டு அசுசையாகி விட்டதா? மன்னித்துக் கொள் ஐயனே! இனி இவ்வாறு நடக்காமல் அதி ஜாக்கிரதையாக உனக்கு உணவு கொண்டு வருகிறேன் என கெஞ்சினார் நாமதேவ்!



2

ஸ்வாமி அசைந்தபாடில்லை? வந்த ஆத்திரம் அடங்கி அழுகை வந்து விட்டது.

ஹே பண்டரிநாதா! நான் ஏதாவது தப்பு தவறு செய்திருந்தாலும், என்னை மன்னித்துக் கொள்! நான் சிறுவன்தானே? சிறியோர் செய்த பெரும் பிழையாயினும், பெரியோரானவர் பொறுப்பது கடன்! என பெரியவர்கள் சொல்லக் கேள்வி! என்னை மன்னிக்க மாட்டாயா? எனக் கோவெனக் கதறி அழுதார் நாமதேவர். அப்போதும் எம்பிரபு, அசையவில்லை. ஆத்திரம் அழுகையாக மாறியது. அழுகை கதறலாக, உருக்கமாக, ஏக்கமாக, சற்று வேகத்துடன் சூடியதாக மாறியது! "அப்போது பூர்வ புண்ணியம் கை கொடுத்தது." அந்த நிலையில்,

# "வாக்கும், செயலும், மாறியது!!!"

ஹே கண்ணா! ஹே கமலநயனா! இதுஎன்ன சோதனை? அன்றுதான் கோகுலத்தில் உன் அன்னை, யசோதையிடம் அடம் பண்ணினாய்! இன்றும், இங்கும், எம்மிடம், அடம் பண்ண பார்க்கிறாயா? இந்தா பார்! இந்த பிரசாதத்தை, இப்படியே வீட்டிற்கு கொண்டு சென்றால், எம் அன்னை வீட்டினுள் வராதே என விரட்டி அடிப்பாள்! செய்தி அறிந்ததும் எம்மை, "எம் அப்பனோ ஓர் முரட்டு கிழம்" அரிவாளால் ஒரே வெட்டாக வெட்டி, இரண்டு துண்டாக்கி விடுவார். உன்னை யாம் இப்போது காணும் போது

# "நீ ஓர் முரடு"

தெய்வமாகத்தான் தோற்றுகிறது. நீயே முரடனாகவும், அடம் பண்ணுபவனாகவும், மாறும் போது, உம் குழந்தையாகிய யாமும்,

# "முரடனாகவும் மூடனாகவும்!"

தான் மாற வேண்டும். வேறு வழி எமக்குத் தெரியவில்லையே பிரபோ, அங்கு சென்று அந்த இருவர்களிடமும், அடிபட்டு, வெட்டுப்பட்டு, சாவதை விட, உன் திருவடியிலேயே இந்த உயிரை விட்டு விடுகிறேன்! அவ்வளவுதானே? சாப்பிடு கண்ணா! சாப்பிடு கண்ணா!! சாப்பிடு கண்ணா!!! (அன்று யாம் பேசு கண்ணா! பேசு கண்ணா!! பேசு கண்ணா!!! என முட்டியது போல்) என தன் தலையை ஸ்ரீபகவான் பாதங்களில் முட்டினார் எம் நாமதேவர்.



உ

ஒரு முறை முட்டியதில் தலை பிளந்தது போல் ஓர், "ரண வேதனை"!

இரண்டாம் முறை முட்டியதில் தலை வெடித்து ரத்தம் "பிதுங்கி" வழியும் நிலை!! மூன்றாம் முறை முட்டியதில், "பஞ்சினும்" மெல்லிய பாகத்தில் முட்டிய நிலையில் ஓர் சுகம்!

அதே நேரம் இரு கரம் கொண்டு, "அஞ்சேல், அஞ்சேல்" என அபயம் கொடுத்து தன்னையே மேலே. தூக்கி, "கருணை மழை" பொழியும், "கமல நயன நீட்சண்ய" பார்வையுடன், ஓர் அரவணைப்பு! அதாவது தம் இருகரங்களையும், நாமதேவருடைய சிரசை அணைவாக மெல்லப்பற்றி வருடிய வண்ணம், அப்படியே அந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டு, அவரை தம் மடிமீது இருத்திக் கொண்டு;

"ஸ்ரீபகவான் வாக்கியம்"!!!

குழந்தாய்! எம் கண்மணியே! அன்பின் அழகு சொரூபமே! அதிக சோதனை தந்து விட்டோமா? ரொம்ப நொந்து போனாயோ? தாய் தந்தை கண்டிப்பில் அதிக வாட்டமுற்றாயோ? சோர்ந்து போகாதே. கலக்கம் அடையாதே! பயம் வேண்டாம்! யாம் எந்த நொடியும் உன் உள்ளும் புறமுமாய் இருந்து வழி நடத்துவோம்; "யாம் ஒரு பலனைக் கொடுப்பதாக" இருந்தால் அந்த பக்குவ ஆன்மாவின் "பலத்தை"!!!

அதாவது அவனுடைய "நம்பிக்கையையும், திட வைராக்கியத்தை"யும், பரீட்சித்து பார்ப்பது வழக்கம். அந்நிலையில் நான் இவ்வாறு நடந்து கொண்டோம். (எம்மை மன்னித்துவிடு.) நீ உருவ "வயதில் சிறியவன்" ஆனாலும், ஆன்ம



உணர்வில் "மிகப்பெரியவன்"!
இதை இப்போது உள்நிலையில் நீ உணராய்!
ஆனால் யாம் உணர்வோம். காரணம் நீ இப்போது
"விளையாட்டுப் பருவம்"!!
இருந்தாலும் நீ ஆட வந்த விளையாட்டு வேறு.
"நீ" "எம்முடன்" சிலகாலம் விளையாடுவாயாக
பின் வந்த விளையாட்டை, விளையாட ஆரம்பித்து வைத்து
விட்டு, யாம் "உன்னுடனேமயமாவோம்"
என எம் கண்ணன் கனியக் கனிய உரையாடினான்!

எம் அன்பு நிறைந்த உள்ளங்களே! எம் ஆன்ம
சொரூபங்களே! இனி கவனமாகவும், கருத்துடனும் கதை
கேட்கவும் (கதையை மறக்கவும்! கருத்தை மட்டும் உணரவும்!)

எம் பரமாத்மா மடியில் அமர்ந்த வண்ணம், எம் பிரபு
சொல்லும், கனி அமுத மொழிகளை, காது கருத்துடன் கேட்கவும்.
"கண்கள் எம் பிரபுவின், திருமுகமண்டலத்தையும், அவன் தலையில்
உள்ள "ஒற்றை மயிற்பீலி"யைக் கண்டு
அதுவரை ரசிக்கவும். வலக்கரம் எம் பிரபுவின் வலக்கரத்தில்
உள்ள "அடியார்களைக் காப்போம்" என்ற
நிலையில் அணியப்பட்டிருக்கும் "கங்கணத்தை"!
உருட்டி சுற்றிய வண்ணம் சரிபார்க்கவும். இடக்கரம் எம்பிரபு
வின் கரத்தில் உள்ள "ஞானக்குழல்" வருடி வருடி
தம் விரல்களால் வயம் பண்ணவும். வாய் அவ்வமையும் அறியாமல்
"கோவிந்தா, கோபாலா, மாதவா, மதுசூதனா, வேணுவிலோலா,
கிரிதாரி, முராரி, தஸ்கரணம்பதி, கேசவா, இருடிகேசா,
கமலக்கண்ணா, ஹரே கிருஷ்ணா, ஹரே கிருஷ்ணா, ஹரே கிருஷ்ணா"
என எம் இறைவனின் குறிப்பான "12 பன்னிரண்டு"
அக்ஷரங்களையும் ஸ்மரித்த வண்ணம் இருந்தது!!!



உ

எம் தவத்தின் ஞானப்புதல்வனை, உங்கள் ஸத்குரு தேவனை, பரம்பூஜ்ய "பப்பா"வின் உத்தம சிஷ்யனை, பரம்பூஜ்ய மாதாஜீ "கிருஷ்ணாபாய்" அவர்களின் தவக்கொழுந்தானை, ஆனந்தாஸ்ரமத்தின் "ஸ்தாபிதமான", உங்கள் "ஸத்குரு" "ஸத்சித் ஆனந்தாவின்"!

கண்மணிகளே! அந்த காலாதீத அந்த ஒன்றின் கருணையினால், "இருவரும்" (ஸ்ரீபகவானும், உத்தமபக்தனும்) ஓர் நிலைக்கு வந்தனர். ஸ்ரீபகவானுக்கு நம் நாமதேவ் ஊட்டுகிறார். நம் நாமதேவருக்கு ஸ்ரீ பகவான் ஊட்டுகிறார். ஒருவர் வாயில் உள்ளதை, ஒருவர் "நோண்டி எடுத்து", உண்டு "உச்சிஷ்டத்தின்" மகிமையை வெளிப்படுத்திக் கொள்கின்றனர். ஒருவர் ஆடையை ஒருவர் அணிந்து கொள்கின்றனர். இருவரும் ஒருவருக்கொருவர் சந்தனம், ஜவ்வாது இவைகளை எடுத்து பூசிக் கொள்கின்றனர். ஒருவருக்கொருவர் அடைக்காயிலையை, (வெற்றிலையை) மடித்து கொடுத்து தாம்பூலம் தரித்துக் கொள்கின்றனர். வாயில் மென்ற தாம்பூலத்தை, ஒருவருக்கொருவர் கைகளில் "உமிழ்ந்து", உச்சிஷ்ட பரிமாற்றம் செய்து கொள்ளுகின்றனர்.

எம் ஞானக் கருவூலங்களே! இந்த விதமாக ஸ்ரீபகவானும், நாமதேவரும், "நாற்பது" ஆண்டுகளாக "சேவை" கொடுத்தும், "சேவை" வாங்கியும் ஆனந்தமாக இருந்தார்கள்.

இதில் உங்கள் "சேவை"யின் நிலை என்னவோ ????

சரி சரி இனி கதைக்கு வருவோம். நாமதேவருக்கு ஸ்ரீ பகவான் கிருபையினால், திருமணமும் ஆகி ஓர் மகவும் பிறந்து வளர்ந்தது!



உ

நாமதேவரின் மனைவியின் நாமம் "ருக்மா பாய்" என்பதாகும். "ஸ்ரீ பகவான் உடன் இருந்தாலே "வறுமை" அவஸ்யம் இருக்க வேண்டும். இது ஸ்ரீமஹான்களின் அனுபவம். இவர்கள் கஷ்ட ஜீவனத்தினால், வயதான நாமதேவரின் தாய், குணாயீ தாளாத துயருற்றாள். வறுமையின் காரணமாக குணாயீயின் மனம் அதிகம் நொந்து போனது. அவள் கணவன் தாம் சேஷ்டியும், தையல் தைக்க முடியாமல், வயோதிகராகி விட்டார். மனைவி ருக்மா பாயும், ஒரு குழந்தையை வைத்துக் கொண்டு, அதிகமாக கஷ்டப் படுகிறாள்.

இவர்கள் அனைவரின் நிலையும் நம் நாமதேவருக்கு, கொஞ்சமும் தோற்றவில்லை. (கனவாகக் கூடத் தோற்றவில்லை போலும்?) "விட்டல், விட்டல்" சேவை, சேவை" இரவும் பகலும், ஆலயமே அவர் வாஸஸ்தலம். ஸ்ரீ பகவானைப் பார்த்து "நிலை அறிந்த" வீட்டிற்குப் போய் வா என்றால்? "வீடா"???? அப்படி என்றால் என்ன? என்பார்?

நம் நாமதேவ! ஸ்ரீ பகவான் திகைப்பான்! இப்படி மறந்து விட்டானே! அப்பா நாமதேவ் வீடு என்பது, உன் தாய், தந்தை, உன் மனைவி, குழந்தை இருக்கும் இடமே வீடாகும்.

நாமதேவர்:- அப்படியானால் நீ யார்? இது என்ன இடம்?

ஸ்ரீ பகவான்:- யாம் பகவான்! இது எம் ஆலயம்!

நாமதேவர்:- அது ஊர் உலகிற்கு! அது எமக்கல்லவே!

ஸ்ரீ பகவான்:- அப்படியானால் உனக்கு எப்படி தோற்றுகிறது?

நாமதேவர்:- நீயே எம் மாதா பிதா! எம் மனைவி குழந்தை! அனைத்து உறவுகளும் நீயே! இதுவே எம் வீடு!

ஸ்ரீ பகவான்:- (தமக்குள்ளேயே) சரி சரி இனி இவனை மாற்ற முடியாது! "நாம் தான் மாற வேண்டும்" என சொல்லிக் கொண்டு



உ

பலமுறை நாமதேவர் வீட்டிற்கு, நாமதேவ ராகச் சென்றும், பல அன்பர்களாகச் சென்றும், "சாமங்கள்" கொடுத்தே, அக்காரியங்களையும், குறையில்லாமல் செய்து வந்தான் எம்பிரபு! இதை "அவன் ஒருவனே அறிவான். ஏனையோர் அறியார்"!

ஓர் நாள் :- ஸ்ரீபகவான் மறந்தானோ? அல்லது அவர்கள் வினையால் மறக்கடிக்கப்பட்டானோ? யாம் அறியோம்.

பலசிரமங்கள், பல கஷ்டங்கள், தாய் குணாய் தம் மகன் நாமதேவை தேடி, ஆலயத்திற்கே வந்துவிட்டாள். உள்ளே நுழைந்தாள் ஓர் கத்து கத்தினள் குணாபாய் :- "டேநாமா"!

ஆலயம் நிசப்தமாக இருந்தது. இவள் அலறிய ஓசைமட்டும், திரும்பத் திரும்ப, எதிரொலித்தது! எம்பிரபுவின் திருவடியின் கீழ் ஓர் ஓரமாக, "ஆழ்ந்த யோக நித்திரையில் இருந்தார்" நம் நாமதேவர். அவருக்கு இவ்வுலகமோ, உறவோ, பந்தபாச இணைப்போ அணுவளவும் இல்லை. ஆனால் "அதை எம்பிரபு ஏற்றுக் கொண்டான்"! ஸ்ரீபகவான் பார்த்தான். குணாபாய் வந்ததும், சப்தம் போட்டு அவள்மகனை அழைத்ததும், அந்த சப்தத்திலும், அசையாமல் கருங்கல்லைப்போல், நாமதேவ் இருக்கும் நிலையையும் பார்த்தான். ஸ்ரீபகவன் தனக்குத்தானே, ஓர் பழமொழியை சொல்லிக்கொண்டான். அப்பழமொழியாவது,

"அடங்காப்பிள்ளையை பெற்றால் (அதன்தாய்) உறங்காமல் விழித்திருக்க வேண்டும்"! (அதுவொரு பழமொழி)

எனத் தாம் சிந்தித்துக் கொண்டே, செங்கல்லை விட்டு சற்று இறங்கி,



அடுத்த வாசலுக்கு வந்து, "பணிந்து தம் சிரம் தாழ்த்தி, இருகரமும் கூப்பிக்கொண்டு,"

ஸ்ரீபகவான்:— அம்மா! இதோ வந்தோம். வந்தோம். வந்தோம். அழைத்த காரணம் என்ன? சொன்னால் உடனே செய்து முடிக்கிறோம். சீக்கிரம் சொல்லுங்கள் அம்மா!

குணபாய்:— நீ யாரடா? நான் என் மகனை அழைத்தால், நீ ஓடி வருகிறாயே? எங்கே அவன், என் நாமா?

ஸ்ரீபகவான்:— அம்மா! யாம் விட்டோபா! (இப்படி தம்மை அறிமுகப்படுத்திக் கொடுக்கும், நிலைக்கு வந்து விட்டோமே, என முணுமுணுத்துக் கொண்டே) தாங்கள் மகன் நாமதேவ், உள்ளே சற்று கண்அயர்ந்து கொண்டிருக்கிறார். எம்மிடம் சொன்னால் போதுமே. அவர் காரியங்களை யாமே செய்து முடிப்போம் (என பணிவும், கனிவும், நிறைந்த குரலில் கூறினான் எம்பிரான்)

குணபாய்:— ஓஹோ! ஓஹோ! ஓஹோ! நீதான் இக்கோயில் அதிபதியா? (வறுமையும் அறியாமையும் இணைந்த தன்மையினால் இப்படி புலம்புகிறாள்). நல்லா இருக்கையா உன் லக்ஷணம்! ஊர் உலகத்தை காக்கிறவன், இப்படி "**ஆலயத்திலேயே உறங்கிக்**" கொண்டு இருந்தால், "உன்னை நம்பியிருக்கும், எங்கள் நிலை என்ன ஆவது?" சரி சரி, உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. "பெரிய மாளிகை போன்ற கோயில்! வேளா வேளைக்கு சாப்பாடு" நீ எப்படியும் இருந்து விடுவாய்! எங்கள் தலையெழுத்து நாங்கள் கஷ்டப்படுகிறோம். "**என்மகன் எங்கே?**" நீ கெட்ட கேட்டிற்கு, அவன் உனக்குத் துணையா? கொண்டுவா அவனை, என்று கூறிக் கொண்டே, "**அடே நாமா**" வாடா வெளியே, என அலறினாள் எம் குணபாய்! இந்த கலவரத்தில்,



## 2

நம் நாமதேவர் தெய்வாதீனமாக வெளியே வந்தார். அவர் உலகையே மறந்த நிலையில் இருந்ததால் ஒன்றுமே புரியாமல், ஸ்ரீ பகவானுக்கும், அன்னை குணாயிக்கும் இடையில் வந்து நம் நாமதேவர் நின்றார்!

குணாயி:— அடே நாமா! உனக்கு இங்கு என்ன வேலை? இந்த விடோபாவோடு சேர்ந்தால், நீயும் சோம்பேறியாகி கெட்டுப் போவாய். வா என்னோடு என சொல்லி நாமதேவர் கரம் பற்றி, இழுத்துக் கொண்டு புறப்பட்டார் நம் குணாயி. உடனே ஸ்ரீ பகவானும், நம் நாமதேவருடைய மறு கரத்தைப் பற்றிக் கொண்டார்.

ஸ்ரீ பகவான்:— அம்மா! அம்மா! இவன் ஒருவன்தான் எமக்கு அன்னையும், தந்தையும், சகோதரனுமாக இருந்து எமக்கு உபகாரமாக இருக்கிறான். இவனையும் நீ அழைத்து சென்று விட்டால், எமக்கு "ஆதரவு" எவரும் இல்லையே அம்மா!!! சற்று கருணை காட்டவாகாதா? இவனையே நம்பி இருக்கும் இந்த "ஏழையை" கண் பாரம்மா!

குணாயி:— ஏண்டா விடோபா! உன் ஆலயத்திற்குத்தான், தினமும் ஆயிரம் பேர் வருகிறார்களே! அவர்களில் எவனையாவது ஓர் "ஏமாளியை" பிடித்து வைத்துக் கொள்வதுதானே? ஏன் என் மகன் நாமாவை விட்டால் வேறு ஆள் இந்த பண்டரியிலேயே கிடையாதா? ஏன் இப்படி "பாஸாங்கு செய்கிறாய்?"

ஸ்ரீ பகவான்:— அம்மா! கருணாகரி! உன் மகனை விட எமக்கு "வேறு கதி" இல்லையம்மா? நீ சொல்லும் ஆயிரமல்ல, லட்சமல்ல, கோடியுமல்ல, இவ்வுலகம் முழுவதும் தேடிப் பார்த்தாலும் "இவனைப் போல் ஒருவன்" கிடைப்பது அரிதிலும் அரிதாகும்!

குணாயி:— அப்படியென்ன அதிசயமானவன் இவன்? காரணமென்ன?



உ

# “ஸ்ரீபகவான் வாக்கியம்”!

எம் அன்னையே குணமயி!

இவன் அமுத மொழி சொல்லி, ஆடிப் பாடி அரவணைத்து, “அன்பைப்” பொழிவதில், “அன்னை”! ஆவான். அப்போதைக்கப் போது தெரிந்த “அறிவுரை” சொல்வதில் “எம்தந்தை”! ஆவான். எந்த விடையும் உடன் இருந்தே, அனைத்தையும் செய்து முடிப்பதில், “தமையனும்” “நண்பனும்”! ஆவான். “எம் உறவு, சுற்றம், எல்லாம்,” ம்! “இவன் ஒருவனே”!!!!!

அம்மா! குணமாய்! நீ சொல்லும் உலகோர், லட்சக்கணக்கிலும், விசேஷக்காலங்களில் கோடிக்கணக்கிலும், வருகின்றனர். வருபவர் அனைவருமே “அபிமான”! “அஹங்காரம்”! உள்ள “வியாபாரி”யாகவும், (எதிர்பார்ப்பு, வேண்டுதல்) “விளம்பரதாரர்”களாகவும். அவர்கள் பஜனை, ஆராதனை, தான தர்மம், அன்னதானம், மற்றும் அனைத்தும் அவன் நாமா நிலைபெற வேண்டும். எம் நாமா ஒலித்து மறைய வேண்டும்! என்ற “தற்புகழ்ச்சி”யாக இருக்கிறதே தவிர, உண்மையின் உருக்கம் இல்லை. ஒற்றியில், “ஆடம்பரமாக”! அதாவது “பாம்டம்”! என போடுபோடென போட்டு விட்டு, ஒன்றும் இல்லாமல் போகும் நிலை! இவர்களை எப்படி அம்மா, எம் உறவென்று சொல்ல முடியும்?



உ

எம் அன்னையே! குழந்தாய்! மேலும் சில உண்மைகளை உரைக்கிறேன், கவனமாகக் கேட்பாயாக!

ஒருவன் தனக்கு அழகான மனைவி வேண்டுமென்றான். அவன் "வினை"யின்படி ஒரு மனைவி கொடுத்தோம். "அவன் மனைவியால் பிரச்சனை" அவன் எம்மை வெறுத்தான்.

ஒருத்தி தனக்கு அழகான கணவன் வேண்டுமென்று கேட்டாள். அவள் "வினை"யின்படி ஓர் கணவன் அமைந்தான். "அந்த கணவனால் அவளுக்கு பிரச்சனை," அவள் எம்மை வெறுத்தாள்!

இருவர் புத்திர சந்தானம் இல்லையே, அதை கொடு என பிரார்த்தித்தனர். அவர்கள் "வினை"யின்படி ஓர் குழந்தை பிறந்தது. அக்குழந்தையால் அவர்களுக்குப் பிரச்சனை. அவர்கள் எம்மை வெறுத்தனர்!

ஒருவன் வறுமையால் வாடுகிறேன், செல்வம் கொடு என வேண்டினான். அவன் "வினை"யின்படி செல்வம் குவிந்தது. "அவனுக்கு அச்செல்வத்தால் பிரச்சனை" அவன் எம்மை வெறுத்தான்!

எம் அன்பு அன்னையே! குழந்தாய்! இப்படி ஆயிரக் கணக்கில், லட்சக் கணக்கில், கோடான கோடி பேர் "எனக்கு இது வேண்டும். எனக்கு அது வேண்டும்", என **தன் "வினை"யின்படி தேவைகளையும், ஆசைகளையும் "அடக்க"** முடியாமல், தன் வாயாலேயே தானே கேட்டுக்கொண்டு, அதனால் வரும் "கடும் அவஸ்தைகளை யாம் கொடுத்ததாக" எண்ணி, எண்ணி, எண்ணி, எம்மை வெறுக்கின்றனர்! "ஊருக்கு இளையவன் பிள்ளையார் கோயில் ஆண்டி"! என்பது போல் எம் நிலையும் ஆகிவிட்டதம்மா. இச்சீவர்கள் தங்கள் பிராப்தத்தை மட்டும் அனுபவிக்கவே, "காலம் நேரம் போதவில்லை" பற்றாக் குறைக்கு,



ஆகாமியமாக "அதைக்கொடு, இதைகொடு?"
என "ஆசை"யையும், "தேவை"யையும்
பெருக்கிக் கொண்டு வேதனை, கவலை, கஷ்டம்,
பயம், துக்கம் இவைகளை, வலிய ஏற்றுக்
கொண்டு, "இறைவன் சோதிக்கிறனே"!
என பழிபாவத்தை எம் தலையில் சுமத்தி
விடுகிறார்களேயம்மா? யாம் என் செய்வோம்? எமக்கு
"பொறுமையும்", கருணையும்!" தவிர
வேறு எதுவும் தெரியாது, கிடையாது, எமக்கு தேவையுமில்லை!
"அம்மா"! "அம்மா"!! "அம்மா!!!
"ஜனாயீ!" நீயோ வயதிலும், அறிவிலும், முதிர்ந்தவள்.
நீ சொல்லம்மா இந்த நியாயத்தை. அவர்களாகவே, ஆசை
வசப்பட்டு, கேட்டு அவஸ்தைப் படுகிறார்களே, இது என்ன நியாயம்?
"ஒருவராவது", "அடே விட்டல்",
என்றோ, "அடே விட்டோபா" என்றோ, எம்மை
அழைத்து, "நீ ஒருவன் மட்டும் எம்முடன்
வந்துவிடு, அது போதும்"!!!
என எம்மை எவராவது அழைக்கிறார்களா? இல்லையே!!!!!!
"அது ஏன் அம்மா??????"
எம்மை மட்டும், அவர்கள் அழைத்தால் என்ன? அவர்களுக்கு
என்ன குறைந்துவிடும்? யாம் அவர்களுக்கு "பாரம்"
ஆகிவிடுவோமா? யாம் அவர்களை கவனிக்கமாட்டோமா?



உ

அம்மா! குணாயீ! அவர்கள் எம்மை மட்டும் அழைத்தால், அவர்கள் "இருப்பிடத்திலும், ஆடை அணிமணிகளிலும், சாப்பாட்டிலும், உறவு முறைகளிலும், "பங்கு கேட்டு" விடுவோமா??? யாம் எதற்குமே லாயக்கில்லை, என ஒதுக்கி விட்டார்களா? எம்மை நம்பி பிரயோஜனம் இல்லையென, முடிவு கட்டி விட்டார்களா? யாம் ஓர் "உதவாக்கரை" என எண்ணி விட்டார்கள் போல் தெரிகிறது. யாம் அவர்களுக்கு, "உதவ, அக்கரையானவன்" என்பதை மறந்து விட்டார்களே! "அம்மா! குணாயீ! அம்மா! தயாளாகரி"! இவ்வுலகமும், இவ்வுலக மக்களும், எவருமே எம்மை விரும்பாமல், வெறுத்து ஒதுக்கி விட்டனரே!!! எம் அவல நிலையை கண்டீர்களா அம்மா! அம்மா உண்மையில் எம்மை சொல்லப் போனால் "யாம் யாருமற்ற" "ஓர் அனாதையம்மா!!!" "இந்த அனாதைக்கு நீயே எம் தாய்! இந்த அனாதைக்கு உன் மகனே" "அனைத்தும் அம்மா!" "இவனையும் நீ கூட்டிச் சென்று விட்டால்", "எம் கதி என்னம்மா"???? "கடைக்கண் பாரம்மா!" யாமும் இனி ஓர் "அனாதையாக வேண்டுமா என்ன?" எம் "அன்புருவை" நீ அழைத்துச் செல்லலாம் என்றுன் எம் "விட்டலன்"!!!



2

எம் அன்பின் சொரூபமான
"ஆனந்தாஸ்ரமம்"
"ஆனந்த குழந்தைகளே!"

இப்படி எம்பிரபு, எம் கருணை வள்ளல், எம் தீன தயாளு, உருக்கமுடன் அழைத்தால் உடனே வருபவன், நான், எனது, என்னுடையதை நீக்கிப் பார்த்தால், உடனே "பிரத்யட்சமாகும்", எம் கமலக் கண்ணன் "ஓர் அன்புத் தாயிடம் கொஞ்சும் குழந்தையைப் போல், நம் "உள்ளம் உருகும் நிலையில்!" கெஞ்சிக் கேட்கிறான் எம்பிரபு! இதே நேரம் நம் நாமதேவர், ஆடாமல், அசையாமல் உள்ளம் உருக, ஊன் உருக, நெக்கு நெக்குருக, கண் அருவி பெருக்கெடுத்து ஓட, ஏமதயியனைப் பார்த்த வண்ணம் நிற்கிறார்.

அடுத்த சந்நிதியில் இருக்கும் எம் அன்னை, ரகுமாயி (ருக்மணிபிராட்டியார்) என்னமோ, ஏதோ என, அவசர அவசரமாக வெளியில் வந்து, அம்மேவமையும், தம் மூக்கின் மேல் விரல் வைத்தவண்ணம், பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

எம்பிரபுவின் உருக்கமான வேண்டுதலையும், அவன் கெஞ்சுதலையும், யாம் அனாதையம்மா என்றும், இனியும் யாம் அனாதையாகத்தான் நிற்க வேண்டுமோ? என கேட்ட வார்த்தைகளை எந்த "தாயுள்ளம் தான்" சகிக்கும்.

உடனே அன்னையாம் அந்த, குணபாய் என்ற தாய், நாமதேவர் கரத்தை, எம்பிரபுவின் கரத்தில் இணைத்து தம் இருகரங்களாலும் "இருகப்பற்றிய வண்ணம்," அந்த வயோதிக நிலையிலும், "கம்பீரமாக" "உரத்த குரலில்"! இவ்விதம் கூறினாள்! அதாவது?



"ஏ விட்டோபா! ஹே விட்டல்! ஹே பாண்டுரங்கா!

"நீ அனாதையில்லையடா!

"நீ நாமாக்கு மூத்த மகன்டா!

"என் நாமா, உனக்கு இளையவன்டா!

"நீங்கள் இருவருமே என்னுடைய குழந்தைகள் தான்டா!

"உன்னை அனாதை ஆக விடமாட்டேன்!" இதுசத்தியம்!

எனப்ரமாணம் பண்ணிக் கொண்டாள். இக்காட்சியை நேருக்கு நேராக கண்டஎம் அன்னை, ரகு! (ருக்மணி தேவி) "......" தேம்பித் தேம்பி அழுத வண்ணம், கண்ணருவி கொட்ட, மெய்சிலிர்த்து, இப்படியும் இப்பூவுலகில், "தாயுள்ளம்" கொண்டு பக்குவ ஆன்மாக்களும் இருக்கத் தானே செய்கிறார்கள். என்னே எம் இறைவன் சிருஷ்டி என ஆச்சர்ய, ஆனந்தத்தில், திளைத்து நிற்கிறாள்!

எம் ஆனந்த சொரூபங்களே!

மேலே சொல்லிய அந்த நாள் வரையும், (குணாபாய்! நாமதேவ்! விட்டல்! ரகு!) அவர்கள் நிலையையும், நேருக்கு நேராக யாம் கண்டு கொண்டிருப்பதால். கண்ணீர் கரைபுரண்டு ஓடுவதால், எழுத்துக்கள் தெரியவில்லை! வரிவடிவம் வர தயங்குகிறது! எழுதுகோல் என்ன ஆயிற்றோ தெரியவில்லை, யாம் எங்கிருக்கிறோம் எனவும் புரியவில்லை! .

[illegible] - - - - - - - - - - - - - - - - - - -

- - - - - - - - - - - - - - - - - - - - - - - -

குழந்தைகளே! விட்டல் ரகு யார்? குணாபாய் நாமதேவ் யார்? [illegible]

எல்லாம் ஒன்றே! அதுயாமே! இதுசத்தியம்!



உ

எம் அன்புச் செல்வர்களையும், உங்கள்
**"ஸத்குரு தேவரையும்"**
அமைந்த **"ஸத்ஸித் ஆனந்தா"**
வின் அன்பு மழலைகளே! ஆனந்தாஸ்ரம
ஆனந்த வடிவங்களே! இந்த வைத்தியத்தின்
**"அன்பும்" "அறிவும்"** நிறைந்த எம்
**"அன்னை, தந்தையர்களே"!!!** இக்கதை
மூலம் நீங்கள் உணர்வதாவது: 1. நீங்கள் இறைவன் குழந்தை
ஆகாதவரை, இவ்வுலகை விடவும், "ஆத்மஞானம் பெறவும் முடியாது".

2. தேவைகளையும், ஆசைகளையும், குறைத்து குறைத்து அவைகளை
விடாமல் "ஆத்மஞானம் பெற முடியாது".

3. இறைவனிடம் எந்த கோரிக்கையும் கோராமல், "உன் திருவடியே
தஞ்சம்" என்றும், "உன் திருவடியே" (அவன் நாமாவே) உயிர்
மூச்சென்றும், சர்வார்ப்பணம் செய்யாமல் "ஆத்மஞானம் பெற
முடியாது".

4. எதையும் கோராமல், அவனைக் கேளுங்கள். அவனைக் கொடுத்தால்
நிலை அறிந்து அவனைக் கொடுப்பான். "ஆசை வசப்பட்டு" நீங்கள் கேட்
டால், "வினையாகிய அவஸ்தையைத்தான் கேட்க முடியும்". அவன்
பொறுப்பில் உங்களை விட்டு விட்டால், ஸத்குருவை கொடுப்பான்,
அல்லது ஸத்குருவாய் வருவான். ஸத்குரு கிருபை இல்லாமல்,
சாமான்ய குருவால், "ஆத்மஞானம் பெற முடியாது".

5. அவனை நீங்கள் பெற வேண்டுமானால்? "நான், என்னுடையது" என்ற அஹங்கார, அதிகார, அபிமானம்,
இவைகளை **"முழுமையாக"** விட்டாலன்றி,
அவனை பெறவும் முடியாது. அவனை ஸத்குரு கிருபையில்லையானால்,
"ஆத்மஞானம் பெற முடியாது".



உ

6. இறைவன் உங்கள் தந்தை. ஆகவே அவன் குழந்தைகளாகிய நீங்கள், இவ்வுலகில் அவன் நாமமாலை சொல்லி, "விளையாடுங்கள்". ஆனால் சொந்தம் கொண்டாடி, "உரிமை" கொண்டாடவேண்டாம். "நான், என்னுடைய, எனது" என்ற உரிமையை விட்டாலன்றி "ஆத்மஞானம் பெறமுடியாது".

7. உலகியல் தானதர்மம் "இரும்பு ஊசி". ஸத்காரியம் "சேவை" "பொன் ஊசி". இவ்விரண்டும் "கர்மாவின்" பிணைப்பே. இவைகளை "காலம், பக்குவம்" உணர்ந்து விட்டாலன்றி "ஆத்ம ஞானம் பெறமுடியாது".

8. "தந்தது என் தன்னை", "கொண்டது உன் தன்னை" என்ற ஸ்ரீமஹான்களின் ஸத்தியவாக்குப்படி, "என்" என்ற "என்னுடையதை" கொடுக்காமல், "உன்" என்ற "உன்னுடையதை" பெறமுடியாது. உங்கள் "உடல், பொருள், ஆவி" ஆகியவை மூன்றையும் முழுமையாக விட்டாலன்றி, "ஆத்மஞானம் பெறமுடியாது".

9. காண்பன, மாறும், மறையும். கேட்பன, விகாரம், விலகாரம் (பிரச்சனை) அடையும். இவ்விரண்டிலும் பேத திருஷ்டி; விருப்பு வெறுப்பு, குற்றம் குறை காணல், ஆகியவை மூன்றையும் விடாமல் "ஆத்ம ஞானம் பெறமுடியாது".

10. நாமரூப குணம் குறி கடந்த அந்த காலாதீத ஒன்று பரசொரூபம், அது "மண்", நம் உபாஸ்ய மூர்த்தி இறைவன் "பொன்", நாம் "ஆபரணம்", ஆகிய இம் மூன்றும் "மண்ணே" என்ற உணர்வு பெறாதவரை, ஆத்ம ஞானம் பெறமுடியாது.



உ

ஓம் அன்புதவச் செல்வங்களே!
இதில் கூறிய, பத்து ஸத்திய வாசகங்களை
யும், அவஸியம் கடைப்பிடிக்கால் உங்கள்
அனைவருக்கும், "இறைகுரு"!!!
திருவையும், ஆசியும், அனுபவ ஞானமும்,
அவஸியம் ஸாத்தியமாகும், என கூறி ஆசி
வழங்குகிறோம்.

1. "ஸத்குருபாதத்தை நம்பு"!
2. "ஒன்றென்றிரு"! (தெய்வம் ஒன்றே என்றிரு)
3. நல் அறமும் நட்பும் நன்றென்றிரு!
4. நடு நீங்காமவே நமக்கு இட்டபடி என்றென்றிரு!
5. உடல் பொய்ம்ம வாட்டம் என்றே இரு!
6. சுற்றத்தை, உறவை, சந்தைக் கூட்டம் என்றே இரு!
7. வாழ்வை குடம் கவிழ் நீர், ஓட்டம் என்றே இரு!
8. "நாட்டம் ஒன்றே இரு"!!!

ஆத்திரம் அறிவுநாசம்! கோபம் சண்டாளன்! வேகம் வேண்டாம்!
பதறாத காரியம் சிதறாது! பணிவே உன் பாதை! நம்பிக்கை உன் இரு
கரங்கள்! வைராக்கியம் உன் இருகால்கள்! அறிவே குரு!
அன்பே தெய்வம்! கடும் தூக்கம் காலன்! ஏக்கம் வேண்டும்!
நண்பனும் பகைவனும் உன்னுள்ளே! அறிவே நண்பன்!
மனமே பகைவன்! ஆசையும், கோபமும், மனைவியும், கணவனும்!
ஆசையும், கோபமும் இணைந்தால், பயமும், துக்கமும், உண்டாகும்!
எல்லாம் ஒன்றே! அது நமதே!
அது யாமே! அது நீங்களே!

பாபா.

நம்பினோர் கெடுவதில்லை! இது ஸத்தியம், ஸத்தியம், ஸத்தியம்!



(ஸத்திய வாக்கை)

ஸத்தியம் பேசு. ஓம் தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்"!

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம், ஓம்"!

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்"!

"ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இரீவ்"!

தெய்வீக அன்பும், இறைசொரூப அம்சமும், அடங்கிஇருந்தலினால் ஆனந்தமும், "ஸத்குரு" வாக்கிய சிரத்தையினால், "ஸ்வய ஞானுபவமும்" பெற்று முழுமை அடைந்துகொண்டிருக்கின்ற, "எம் அன்புச் செல்வங்களே"!

"உதகைமண்டலத்தின் (ஊட்டியின்) ஓர் சம்பவம்"!

# "ஓர் பூனையின் கதை"!

"ஓம் ஞானக்குழந்தைகளே"!!!

உங்கள் "புலனடக்கத்தினால்," நாவடக்கம் சாத்தியமாகி, பார்ப்பது, கேட்பது, பேசுவது, தொடுவது, கற்பனை பண்ணுவது, இவைகளின் "உணர்ச்சிகள்" கெட்டு, முதலில் தெய்வீகம் பின் ஆன்மீகம் இவைகளின் உணர்வுகள் மேலோங்கி பரசொரூபஸ்திதி உணர்வுகள், மேலோங்கி அது நாம், நாம் அது என்ற நிலைபெற வாழ்ந்துவர ஆசிர்வதிக்கிறோம்!



## 2

ஓ எம் ஆத்மானந்தக் குழந்தைகளே!

7-5-2005.

இந்த வைத்தியம் இந்த முறையோடு மும்முறை ஊட்டி சென்றதாகத் தெரிகிறது. ஊட்டி சென்றால், அங்கு வைகாரா அணை சமீபமாக உள்ள, "ஹம்ஸ் விஹார்" என்ற ஆஸ்ரமத்தில், தம் ஸ்ரீ அடியார்களுடன் தங்குவதுண்டு. அந்த ஆஸ்ரம குருதேவர், ஸ்ரீ பரமஹம்ஸ "ஹம்ஸ் தேவ்" அவர்களாகும். இந்த தேவருடைய குருதேவர், "தோதாபுரி" அவர்களாகும். தோதாபுரி மஹாராஜும், இந்த ஹம்ஸ் தேவ் மஹாராஜும், "சமகாலத்தில்" உள்ளவர்களாக தெரிகிறது. இந்த ஹம்ஸ் விகார் ஸ்ரீகுரு ஆஸ்ரமத்தை தற்சமயம் ஸ்ரீ குருபக்தியும், ஸ்ரீ சேவையும், ஸ்ரீ குரு வாக்கியத்தை அப்படியே கடைப்பிடிக்கும், ஓர் வீரமாதாவான சந்நியாசினி இருக்கிறார்கள். அவர்கள் நாமம் பிரம்ம ஸ்ரீ அன்னை "தத்தேஸ்வரி மாதாஜீ" அவர்கள் ஆகும்!

இந்த வைத்தியம் முதல்முறை ஆஸ்ரமம் சென்றிருந்தபோது, இரண்டு டஜன்; அதாவது இருபத்தி நான்குக்கு குறையாமல் "பூனை"களின் கூட்டம், மனைவி மக்கள், பேரன், பேத்தி, அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, என, "பெரிய" குடும்பமாக காட்சி அளித்தது. எம் ஸ்ரீமாதாஜீயும், அவை அத்தனையையும் எந்த சிரமமும் இன்றி, அரவணைத்து தினமும் சப்பாத்தி, பால் மற்றும் சில குறிப்பிட்ட உணவுகளை மட்டும் கொடுத்து, ஒவ்வொன்றுக்கும், "ஒவ்வொரு நாமா" இட்டு அழைத்து, தம் குழந்தைகளைப் போல் பராமரித்து வந்தார்கள். இந்த வைத்தியம் இரண்டாம் முறை போகும்போது, அப்பூனைகளின் எண்ணிக்கை, ஒரு டஜனாக (12 ஆக) குறைந்துவிட்டது. இந்த வைத்தியம் இம்முறை மூன்றாவதாக செல்லும்போது, எம் பரம குரு ஆதிசங்கரருக்கு "வடிகட்டிய நிலையில்" நான்கு சிஷ்யர்கள் இருந்தது போல் நான்கு மட்டும் இருந்தது. "இதனைப் "பிரவர்த்தி" குறைக்கப்பட்டது".



உ

இது எம நயியன் (திருடன்) கண்ணன் திருவிளையாடல் ஆகும். அதாவது அங்கு "புறவிருத்தியை" குறைத்தான் போலும்! "அக உணர்வை" மட்டும் வளர்க்கிறான் போலும். அது "நலமே"!!! "ஆனால் அது மஹாரகஸ்யமாக செய்யப்படுகிறது"!

எம் ஞானச் செல்வங்களே! அந்த நான்கு பூனைகளில் ஒன்று மட்டும் "அவாதியான" இயல்புடையதாக இருக்கிறது. அந்த ஒன்றை மட்டும் யாம் "நோக்காமல்; நோக்குவோம்"!!! அதுவும் எம்மை "பார்க்காமல்; பணியும்"!!!

ஓர் மூன்று தினங்கள் அதை கவனித்தோம். எம் மாதாஜீ ரிபு கீதை கிளாசுக்கு வரும் போதெல்லாம் வந்து விடும். அந்த அன்னையின் மடியில் ஒண்ணரை மணி நேரம் படுத்த நிலையில் தலையை சற்று தூக்கி வைத்துக் கொண்டு, இரு காதுகளையும் சற்று தூக்கிய வண்ணம், அதி "சிரத்தை" யுடன் கவனித்துக் கேட்கும். மற்றைய காலங்களில், அதற்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம், எம் அறைக்கு வரும். ஓர் ஜன்னலில் அமைதியாக அமர்ந்த வண்ணம், தியானம் செய்யும். சில வேளைகளில் யாரும் அறியா வண்ணம் எம்மிடம் "சைகையால் உரையாடும்"! முன் கால்கள் இரண்டையும், அதன் கைகளாக பயன்படுத்தி, சில சைகைகளும், அஞ்சலியும், செய்யும். இந்த பூனையினுடைய இந்த பழக்க வழக்கங்களை கவனிக்கும் போது. "இது யார்"? "வந்த நோக்கம் என்ன? இதற்கு முன்னால் இது எப்படி, எங்கு, என்ன, செய்து கொண்டிருந்தது"?



## 2

இப்படி ஓர் கேள்வியை, எம் இறைசொரூப "சாட்சி" நிலையில், அறிவுபூர்வமாக "நாமாக எழுந்தது". சரி இது நமக்குத் தேவை இல்லாத விஷயம். இது "காலச் சக்கரத்தில் சுழல்வதாகும்"!

"இறந்தது பிறக்கவும்,

"பிறந்தது இறக்கவும்";

ஆகிய அந்த இறப்பும், பிறப்பும், "ஜீவ சகஜம்!" இது நமக்கு எதற்கு என, ஓர் ஸாந்திசமாதானம் செய்த வேளையில், ஓர் கம்பீர குரல் கேட்டது! "ஹேபாபாஜீ" ப்பகாரா நதித்தீரத்திற்கு, உடனே வரவும்". "உம்மிடம் ஓர் உரையாடல் உள்ளது". என்றது அக்குரல்.

அப்போது "பக்தியின் ரஸாம்ஸத்தில்" எம் ஸ்ரீநாமதேவருடைய வரலாற்றை எமதய்யன் (திருடன்) "விட்டலன்"! மூலமாக, அவனுடன் அனுபவித்து எழுதிக் கொண்டிருந்தோம். குரல் கேட்டதும், "அவன் சிரித்தான்"; யாம் "சற்று திகைத்தோம்"!! ஆனால் அடுத்த வினாடி யாம், "எல்லாம் நலமே"! எனச் சொல்லி யாமும், ஆனந்தமாகச் சிரித்தோம். உடனே எம் விட்டலன் சொன்னான், ஹே தாஸி! எங்கும், எந்நிலையிலும், எக்காட்சியிலும், எக்கேள்வியிலும், ஒவ்வொரு அசைவிலும், "எல்லாம் நலமே" என்றும், "அது நலமே" என்றும். இது அப்படியே உம்மிடம் பதிவாகி விட்டது போலும்? என்றான். யாம் அதிபலமாக, கடகடகடகடவென சிரித்துக் கொண்டே, ஹேப்ரபோ! ஐயா! கபடநாடக சூத்திரதாரி! உன் வாக்கு அடியார்கள் திரத்தில் எப்படி வரும்? "யாம் இருக்க பயமேன்"?? என்றதில் யில் வருவது சர்வசாதாரணம். காரணம் "நீயோர் வோக ரக்ஷகன்". ஆனால் யாம் வோக ரக்ஷகன் அல்லவே. யாம் "சர்வாத்மசொரூபனயிற்றே"!!!!



உ

அங்கு வெளிக்கு எந்த குணதோஷங்களும் இல்லையல்லவா? ஆனாலும் சிலசமயங்களில் எம் அன்பர்களுக்காக உன் நிலையிலும் இருந்து வாக்கு கொடுக்க வேண்டிவரும். ஆனாலும் எம் வாக்கு உன்போன்று "ரஜஸின்" நிலையில் வரவே வராது. வந்தால் யாம் அங்கு "காத்தான்ற" நிலைக்கு வந்தாக வேண்டும். அந்த உபாதை எமக்கெதற்கு? ஆகவே எந்நிலையிலும் எம் எதார்த்த "பர சொரூப ஸ்திதியாகிய" "எல்லாம் நலமே" என்ற வாக்கு ஒன்றைத் தவிர வேறு சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹார நிமித்தமான கர்த்தத்துவம் எமக்கு வேண்டாம், ஐயனே, வேண்டாம்!

இப்படி உரையாடிக்கொண்டே பைகாரா நதிக்கு வந்துவிட்டோம், நாங்கள் இருவரும். பைகாரா நதிக்கரையில், யாம் வழக்கமாக அமரும் பாறையில், எம் "தர்ம தேவன்" (காவதேவன்) கம்பீரமாக அமர்ந்திருந்தான். எங்கள் இருவரையும் பார்த்தவுடன், எழுந்து நமஸ்கரித்தவனாய்,

தர்மதேவன்:- ஹே விடோபா! ஹே ஜனார்த்தன! ஏ ஸ்வாமி அடிகளே! ஹே பாபா ஜீ அவர்களே! இருவரும் இப்படி அமரவும் எனச்சொல்லி தாம் அமர்ந்த பாறையை எமக்கு சுட்டிக்காட்டி "இது உமக்கே உரிய ஆஸனம்" என கொடுத்துவிட்டு, எம் பக்கம் உள்ள இருபாறைகளையும், தம் ஆஸனமாக ஆக்கிக்கொண்டு, எம் இருபக்கமும் எமதய்யன் (திருடன்) விடோபாவும் உலகின் தர்மத்தை பரிபாலித்து "நீதிவழங்கும்" தர்மதேவனும் அமர்ந்துகொண்டார்கள்! ஹேபாபா! உம் கேள்விக்கு விடை சொல்லவே, யாம் இங்கு வந்தோம்.



உ

தர்மதேவன்:— அதற்காகவே உம்மை அழைத்தோம். உம்முடன் எமதய்யன், ஜனார்த்தனனாகிய, விடோபாவும் இருப்பது, உம்மை பார்த்தபிறகுதான், தெரிந்து கொண்டோம்!

விடோபா:— ஓகோ! அப்படியா விஷயம்? சரி, சரி உங்கள் இருவர் ஐக்கிய சம்பாஷணையின் யாம் குறுக்கே எதற்கு? யாம் வருகிறோம். அப்புறம் சந்திக்கலாம்!
(விடோபா கரத்தைப்பற்றிக் கொண்டோம்.)

வைத்தியம்:— ஹே சூஸ்திரதாரி! எங்கே நழுவப் பார்க்கிறாய்? நீ இல்லாத சபை ஓர் சபையா? தர்மதேவன் எம்மை அழைத்ததும், அது சமயம் நீ எம்முடன் இருந்ததும், நீங்கள் இருவரும் ஏதோ திட்டம் போட்டு இக்காரியத்தை நடத்துகிறீர்கள் உங்கள் "தெய்வீகநாடகத்தில்" இந்த உதவாக்கரை வைத்தியம் எதற்கு என்பதான் தெரியவில்லை?

விடோபா:— ஹே பாபாஜீ! உம்மை ஓர் "உதவாக்கரை, உதவாக்கரை என சொல்லிக் கொண்டே, "உதவ அக்கரையோடு" இப்பூவுலகில் சஞ்சாரம் செய்யும் ஜீவமஹாத்மா நீ ஒருவன்தான்!

தர்மதேவன்:— ஹே கமலக்கண்ணா! அது பரவாயில்லை. எவருடனும், எந்தநிலையிலும், "பிடிகொடுக்காமல்", எவருக்கும் தம்மை காட்டிக்கொள்ளாமல், நம்மவிலும், ஓர் சுத்தாத்மா, இவர் ஒருவர்தான்.

வைத்தியம்:— ஐயா! தெய்வ சொரூபங்களே! இந்தவிளையாட்டான வார்த்தைகள் உங்களுடன் இருக்கட்டும். அது எமக்கு தேவையில்லை. உங்கள் "விளையாட்டும்" வேண்டாம், உங்கள் "உலகமும்" எமக்கு வேண்டாம்! யாம் அன்றும், இன்றும், என்றும் ஓர் "சுதந்திரப் பறவையே"!! வந்தகாரியத்தை விளக்கலாம், அல்லது அகலவும் செல்லலாம்!



உ

விடோபா:- ஐயா! "பக்தாளின் பாதுகாளியே!" ஏன் இந்த அவசரம்? நாங்கள் இருவரும், உன்னை நாடி வந்த காரியத்தை முடிக்காமல் செல்லவும் மாட்டோம்! உன்னை விடவும் மாட்டோம்!

வைத்தியம்:- ஹே தேவாதி தேவா! ஆதி தேவா! புண்ணிய புருஷா! புருஷோத்தமா! ஸூத்ரதாரியே! ஐயா தர்மதேவனே! ஹே காலபுருஷா! இயம நியமங்களை, அணுவும் தவறாமல் நடத்தும் எம் "இயமதர்மராஜனே!" இந்த ஏழையை மன்னிக்கவும். உங்களுக்கு விளையாட தேவலோகம் இருக்கிறது. பூலோகத்தில் சிறந்த பக்தாள் இருக்கிறார்கள், அவர்களிடம் விளையாடுங்கள். அது பொருந்தும். "மனம்" செயலற்ற ஒன்றிடம் நீங்கள் விளையாட ஒன்றுமே இல்லையே! அதனால் தான் அவ்வாறு சொன்னேன். யாம் கூறியதில் ஏதேனும் தவறு இருந்தால், இவ்வைத்தியத்தை மன்னிக்கவும்!

தர்மதேவன்:- ஹே பாபாஜீ! இப்படி பணிந்து, பணிந்து, உம்மை குறைத்துக் கொள்வதனால் தான் உம் நிலைக்கு இந்த "கலியுகத்தில்" எவரும் வர முடியவில்லை.

விடோபா:- ஹே தர்மதேவா! இவன் எம் அம்சம் முழுமையாக பெற்றவனாகும். ஆனாலும் இவன் நமக்கும் அப்பாற்பட்டவனாகும். "இவன் காலத்திற் குட்பட்டவனன்று!" இவன் இவ்வுலகில் எங்கெங்கு தோன்றினாலும், இவன் தம்மை தாமே தோற்றிக் கொள்வான். எவருக்கும் தம்மை காட்டிக் கொள்ளான். ஆனால் இவன் ரகஸ்யம் என்னவென்றால், இவன் எங்கு தோன்றினாலும் "எம்முடைய அம்சமும், எம்முடைய விளையாட்டும், "மட்டும்" மனமொன்றாக ஏற்றுக் கொள்வான். ஆனால் இவனுக்கு எம் "மாயை" தேவை இல்லை. ஆகவே "மாயா ஜாலம்" உள்ள எம்மிடம், மாயையை விட்டுவிட்டான், எம் ஜாலத்தை



உ

(விளையாட்டை) மட்டும் ஏற்றுக் கொண்டிருந்தான். இவன் இவ்வுலகில் "வருவதும் தெரியாது"! "இருப்பதும் தெரியாது"! "மறைவதும் தெரியாது"! அதாவது "வியாபாரம்"! "விளம்பரம்"! "ஆடம்பரம்"! இவை மூன்றும் இவனிடம் இருப்பதில்லை. ஆகவே இன்றைய உலகில், இவனை இன்னார் என, எவரும் கண்டு கொள்ள முடிவதில்லை! சரிசரி இனியும் வார்த்தை வேண்டாம், வந்த காரியத்தை முடியுங்கள்!

தர்மதேவன்:— ஹேதாஸி மஹாத்மா! நீ இருக்கும் "ஹம்ஸ் விஹார்" ஆஸ்ரமத்தில் இரண்டு மூன்று நாட்களாக, ஓர் ஆன்மாவைப் பற்றி, ஓர் ஆராய்ச்சி, செய்தாய். பின் அது தேவை இல்லையென, முடித்துக் கொண்டாய். ஆனால் அது உனக்கு தேவை இல்லைதான், "உன் குழந்தைகளுக்கு" அது தேவைப்படும் என எமக்கு தோன்றியது. அதனால்தான் உன்னை அழைத்தோம்!

வைத்தியம்:— ஐயா! காலதேவனை தர்மப்பிரபுவே! எம் குழந்தைகளுக்கு என்றால் அது பற்றி சுருக்கமாக விளக்கம் கொடுக்கலாம்!

விட்டலன்:— ஏ பாபா! 1980 லிருந்து 1988 வரை, உன்னுடன் சங்கர ஐயர் என்ற, ஓர் மஹான் பழக்கம் உண்டே. அது பற்றி ஞாபகம் இருக்கிறதா? அதையும் மறந்து விட்டாயா?

வைத்தியம்:— (அறிவை சற்று கூர்ந்த மனதாக்கிக் கொண்டு சற்று ஆழ்ந்து சிந்தித்து) ஆமாம் உண்டு! அவர் மறைந்ததும், எம் ஸ்ரீ குருதேவர் மறைந்த அதே வருடம் தான், என்பதும் ஞாபகம் வருகிறது. அதாவது ஸ்ரீ குருதேவர் சமாதி வைகாசி! சங்கர ஐயர் சமாதி கார்த்திகை! ஆறுமாதங்கள் முன் பின் எனத் தெரிகிறது!

தர்மதேவன்:— அப்பாடா! இப்போதாவது "சற்று மனதை கொண்டு வந்து" எங்களுக்கு பதில் தருகிறாயே, அது போதும் சரி இப்படியே இரு. "மேலே போய் விடாதே"!

வைத்தியம்:— சரி சரி! சங்கர ஐயருக்கும், இந்த ஆன்மாக்கும், என்ன சம்பந்தம்? சங்கர ஐயர் அடுத்த வருடமே திருச்செந்தூரில் ஓர் அந்தண குலத்தில், பிறந்து வருகிறார் என்பதும் தெரியும்! இந்த ஜன்மாவில் அவருக்கு ஜீவன் முக்தி உண்டு என்பதும் தெரியும்! இந்த ஜன்மாவில் தன்னுடைய "இருபத்தி ஆறுவது" வயதில்தான் ஜீவன் முக்தி அடைவார். அவருக்கு இனி "ஸத்குரு தேவை இல்லை" யென்பதும் தெரியும்!



உ

தர்மதேவன்:— ஐயா மஹாத்மா! யாம் உலகின் ஜீவர்கள், (நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன) இவைகளின் கணக்கை, மரம் செடி கொடி புல் பூண்டு இவைகளின் "**விதிக்கணக்கை**" வைத்திருப்பது போன்று, நீரும் ஞானிகளின் கணக்கை எவ்வாறு துல்லியமாக வைத்திருக்கிறீர்? எம் கணக்காவது சற்று தப்பலாம்! ஆனால் உம் கணக்கு ஒருபோதும் தப்பாது!

வைத்தியம்:- ஹே காலதேவா! இது உன் வாக்கு "உபசார வசனமாகும்" உம் கணக்கு அனுப்பிச்சதையும் உமக்கு "**இருப்பு**" இல்லாமல் போய்விடுமே. அதையும் யாம் அறிவோம்! சரி, விஷயத்திற்கு வாருங்கள். சங்கர ஐயருக்கும், பூனைக்கும், என்ன சம்பந்தம்?

விட்டவன்:— ஹே தாஸ! அந்த சங்கர ஐயர், சிவஞான போதகம் என்ற சித்தாந்தநூல், வேதாந்தமாக்கி பாடம் நடத்தும் போது, நீயும் உபகாரகர்த்தாவாக இருந்தாயல்லவா?

வைத்தியம்:- ஆமாம் உண்டு! நாங்கள் இருவரும், சிவ அன்பர்களை அழைத்துக் கொண்டு, அம்பாடத்தின் நிமித்தம், திருக்குறுங்குடி என்னும் நம்பி மலைக்குச் செல்வதுண்டு.

விட்டவன்:— அந்த அன்பர்கள் கூட்டத்தில் "குட்டன் நாயர்" என்ற ஓர் அன்பரும் வருவார் அல்லவா?

வைத்தியம்:— ஆமாம்! குட்டன் நாயர் என்பவர் ஓர் மலையாளி, அவரும் வருவார். ஆனால் அவர் "காமநோயால்" பீடிக்கப்பட்டவர். அவரிடம் விபரம் தெரிந்தவர்கள் சற்று ஒதுங்கியே பழகுவார்கள்.

காலதேவன்:— உன் சங்கர ஐயர் மட்டும் என்னவாம்? அவரும் அந்நோய்க்கு விலக்கு இல்லையே!

வைத்தியம்:— உண்மைதான். எம் சங்கர ஐயரும், அப்படிப்பட்டவரே! ஆனால் "குருதேவர் என்ற முறையால்" அவரை விட்டு எவரும் ஒதுங்க முடியாது. மேலும் சங்கர ஐயரிடம் **வேகமான கோபமும்** உண்டு!



காலதேவன்:- "காமமும், கோபமும்" பக்தி ஞானசாதனையின் சத்துரு இது அனைவருமே அறிந்ததே. இருந்தாலும் சிலருடைய "பூர்வ வினை" அவர்களை தடுமாற வைத்து விடுகிறது. அங்கு "தெய்வபலம்" பரிபூரணமாக இருந்தால் அவை செயலற்று போகும்!

வைத்தியம்:- ஓ எம் நாமதேவனே! நீர் கூறுவது சத்தியவாசகமே! எம் சங்கர ஐயரும் ஓர் "அபிராமி தாஸனே!" அபிராமி அந்தாதியில், முழுமையாக ஈடுபட்டு இருக்கும்போது, அவர் வாக்கு செயல், பணிவாக இருந்தது! காலப் போக்கில் "அபிராமியை மறந்தார்." அடியார்கள் கொடுத்த "ஸ்வய ஞான சித்தர்" எனஆனார். மேலே கூறிய இரண்டும் அதி வேகமாக பற்றிக் கொண்டது.

விட்டலன்:- அவர் மரணத்திற்கும், இந்த தூஷி போகவில்லை. ஒருமுறை அவர் படுக்கையாக இருக்கும் போது, இவர் சென்று அவரை தொட்டுவிட்டு, ஒருநாள் படாத பாடுபட்டார்.

காலதேவன்:- இந்த அனுபவத்தை நம் ஞானி அடிதாசிடம் காணலாம். இவனிடம், "அத்வைதம்" பரிபூரணமாக இருந்தாலும், "பரசொரூப முழுநிலை" பெற்றும், "இறைநாமஸ்மரணையை" அணுவும் விடவில்லை." இந்நிலையில் ஓர் அத்வைத ஞானப்பியாஸி இருப்பானாயின் அவன் அவசியம் ஜீவன்முக்தனாவான் இது சத்தியம்.

விட்டலன்:- ஹே பாபா! அந்த குட்டன்நாயர் என்பவரைப் பற்றி உம்முடைய கணிப்பென்ன?

வைத்தியம்:- ஹே கமலக்கண்ணா! குட்டன்நாயர் உலகபழக்கத்தில் நல்லவரே! யோகத்திலும் கொஞ்சம் பரிட்சயம் உண்டு! ஆனால் பக்தியில் பூரண ஞானம் பெறவில்லை. ஆகவே அவரிடம் "வறட்டு வேதாந்தம்" உண்டு! கனிந்த "அனுபவ ஞானம்" இல்லையென்றே சொல்லலாம். எம் சங்கர ஐயரைப் போன்றே வேத வேதாந்த கருத்துக்கள் கடல்மடை திறந்தது போல் வெளிவரும்!



உ

அது அவர்களுக்கும் பயன்படாது! அதைப் போல பிறருக்கும் பயன்தராது. அது "ஞானம் நீருக்கு"! ஒப்பாகும். இதுதான் அவ்விருவரிடமும் யாம் உணர்ந்தது! மற்றும் "வினை" "மனம்" "விதி" இவைகள் அதன் கர்த்தாக்களாகிய நீங்கள் இருவரும் அறிவீர்கள்!

காலதேவன்:— ஏய் பாபா! எம்மிடம் விளையாடாதீர்! உம் ஓர் மடலில் இம் மூன்றையும், வெகு அழகாகவும், வெகு எளிமையாகவும், வெகு அற்புதமாகவும் எழுதியிருக்கிறீரே! அதை வேண்மொனால் இப்போது எடுத்துக் காட்டவா?

வைத்தியம்:— ஐயா காலகால தேவனே! ஓஎம் திருட்டு ஐயனே! உலகநாடக சூத்திரதாரியே! அனைத்தும் அறிவோம். அம்மடல் இங்கு வேண்டாம்! யாம் சொல்வது யாதெனில்

"1. உங்கள் நிலையில், வினை, மனம், விதி எனச் சொன்னால் அது, அவைகளை வைத்து நீங்கள், "விளையாடும் விளையாட்டு" ஆகும்!

2. எம் நிலையில் வினை, மனம், விதி என சொல்வது உங்கள் விளையாட்டை முழுமையாக விட்டுவிட்டு, "அது நாம்; நாமே அது"! என்ற பரிபூரண நிலைமை சூட்டி வைப்பதாகும்!

உங்களுடையது, "உலகஞானம்"!!!

எம்முடையது, "ஆத்மஞானம்"!!!

உலகஞானம்:— உடல், உலகம், நாம, ரூப, குணம், இவைகளால் பின்னும் (வினை) "இவை புசிப்பின் ஆதாரம்"!

ஆத்மஞானம்:— உடல், உலகம், நாம ரூப குணம் இவைகளை சர்வார்ப்பணமாக இறைவனிடம் விட்டுவிடு. இங்கு வினை அழியும்! இங்கு புசிப்பு இல்லாத்தன்மையினால், மனம் மறைந்தாகும். அத்தன்மையினால் "அது நாம்; நாமே அது"! இதில் நிலைத்து நிற்கலாம்!



## 2

எம் நாமதேவனும், எம் கபட நாடக சூத்திரதாரியும் கடகடகடகடகடகடகடவென சிரித்தார்கள்! ஓடோபா சொன்னான், ஹே மாயா! உன் வாசகம் ஸத்தியமே! இதை எல்லோராலும் உணர முடியாதுதான். இதை "அனுபவ ஞானிகள்" மட்டுமே உணர முடியும். ஓர் நிலையில் எங்கள் கணிப்பான, வினை, மனம், விதி ஆகிய இம் மூன்றும், "வியாபார நோக்கம்" உள்ளதாகும் (அது பற்று வரவு கணக்கு) அதாவது, "பண்டப் பரிவர்த்தனம்" ஆகும். ஆனால் உம்முடைய வினை, மனம், விதி, இவைகளின் பாடம், "நிவர்த்தி" மார்க்கமாகும். அதாவது வியாபாரம் முடிவடைந்து எத்தொழிலும் அற்று (மனோ வியாபாரம் அற்று) "சொல் அற சும்மா, சுகமாக" இருக்கும் நிலையாகும். இதை சொல்லால் விளக்க முடியாது. உணர்பவரின் "ஸ்வய அனுபவத்தால்" உணர முடியும். நம் நாமதேவன், உன்னுடன் விளையாடியதும், எம்முடைய அலட்சிய குறும்புச் சிரிப்பும், "உன் நிலையில்" நீ எப்படி இருக்கிறாய் என சற்று அசைத்துப் பார்த்தோம். உண்மையிலேயே "நீ திடப் பிரக்ஞனே!!!!"

"நலத்தோடும், சுகத்தோடும், இருக்கும் உனக்கு, எங்கள் இருவரின் மிகப் பணிவான வணக்கங்கள்!!" "எங்கள் பணிவான வணக்கங்களும் உன் நிலையில் ஓர் "உபசாரமே!!!"" "இது உன் நிலையில் இல்லவே இல்லைதான். சரி சரி இப்படியே ஒன்றிக் கரைந்துவிட்டால் நாம் எடுத்த உலக வியவஹார ஸத்தியமான இயக்கம்" நடைபெற வேண்டுமே? இனி நம் கதையை தொடர்வோம்.



நாவ தேவன் சொன்னான்!

ஹே பாபாஜீ!

அந்த குட்டன் நாயர் "விதி வசத்தால்",
பெண் மோகத்தில் சிக்கி, "பிராப்த வினை"
மூலமாக இவ்வெண்களை அனுபவித்தான்.
மேலும் ஆசையை அடக்க முடியாத தன்
மையினால், ஆகாமிய வினையை, அதாவது
"**நான், என்றும், என்னுடையது**" என்ற
"வலிய நிலையில்" ஓர் பெண்ணை சேர்ந்தான். அப்பெண்
"ஓர் நல்ல குலஸ்திரீ" தெய்வ நம்பிக்கையும் கொண்டவள்.
அவள் இவனால் கெடுக்கப்பட்டவுடன், இதை எவருக்கும் தெரி
விக்காமல், அவள் உபாசனை மூர்த்தி "ஸ்ரீ விநாயகர்" அவ
ரிடம் மட்டும் முறையிட்டு அழுதுவிட்டு, அந்த பாவத்தை,
இனி கணவனிடம், கொடுக்கக் கூடாதென்ற முடிவில், விஷம்
அருந்தி தற்கொலை செய்து கொண்டாள். அவள் பிராணன்
பிரியும் சமயம்;

ஹே கணநாதா! அடியாள் உடல் இப்படி கெட்டு அதனால்
டீர் மரணம் சம்பவிக்க வேண்டும் என்ற விதி போலும்? இனியும்
"அந்த மனிதனால்" எந்த பெண்ணும், கெட்டுப் போகக் கூடாது.
"**எனக்கு உன் பாதமே கதி**"! அது போல்,
அவனையும் திருத்தி நற்கதியை கொடுப்பாயாக." என வேண்டி
தன் பிராணனை விட்டு விட்டாள். அந்த பத்தினிப் பெண்ணோ,
திருஅண்ணாமலையில் உன் அடியார்களில் ஓர் தம்பதிக்கு பெண்
மகவாக பிறந்து உன்னால் ________ நாமகரணம் சூட்
டப்பட்டு சுகமாக இருக்கிறது. அது வருங்காலம் ஓர் பக்தி
உள்ள பெண்ணாகவும், அடுத்த ஜன்மாவில் ஞானம் பெறும்
வாய்ப்பும் இருக்கிறது. (தற்கொலைக்கு கஷ்டங்கள் உண்டு
என்பது சத்தியமே. ஆனால் அவள் பூர்வ புண்ணியமும் இறை பக்தி
யும், கடைசி நோக்கில் கை கொடுத்துவிட்டது.) அந்த பெண்
காலமான சிவகாலத்தில், இந்த குட்டன் நாயரும் வியாதியால்
பீடிக்கப்பட்டு ஓர் நாள் அவன் ஹாலில் மரணமானான்.



உ

அந்த துராத்மா விஷயசக்தனாலும், விதிவசத்தாலும், "அனேக தீய பழக்கங்கள் புரிந்தாலும்" சங்கர ஐயர் ரூபமாக, அவரை குருவாகப் பெற்றுக் கொண்டு சிவபக்தி சாதனை, "யோகம்" முதலிய சத்கர்மா பண்ணியதாலும், சிறிது காலம் "அத்வைத" பாடம் கேட்டதாலும், அவனுக்கும் ஞானம் வேண்டும் என்றும், இனி பிறவி வேண்டாம் என ஓர் "ஸந்தாப ஏக்கம்" இருந்ததாலும், இயமதர்மபுரியில் விசாரணையில் அவன் செய்த பாபகாரியத்திற்கு, சில தண்டனைகள் அனுபவித்து முடித்து விட்டு, இனி ஓர் ஜன்மாவில், யாம் ஞானம் அடைய வேண்டும், என மனம் உருகி வேண்டியதாலும், இவன் சிலகாலம் "அத்வைத" ஞானம் ஏற்றதாலும், அந்த அத்வைத ஞானம் இவனுக்கு, உதவியது என்றே சொல்லவாம். எம்மிடம் இவன் முறையிட்டு மன்னிப்பு கேட்டு உருகி அழுது, வேண்டும் போது, யாம் சொன்ன வாசகம்:— "செய்நன்றி மறந்தவன் நாயாக பிறப்பான்" என்றும், "பெண்பாபம் புரிந்தவன் பூனையாக பிறப்பான் என்றும்!" நம் சாஸ்திரங்கள் முறையிடுவதால், ஓர் பூனையாக பிறப்பாய், என அவனுக்கு அருள் வழங்கினோம். அவனும் எம்மை வணங்கி பணிந்து, பிரபோ! உங்கள் தண்டனையை, சிரமேல் தாங்கிக் கொள்கிறேன். அந்த ஜன்மாவில் நான் முக்தி அடைய முடியாதே, எனக்கு முக்திக்கு வழிகாட்டுங்கள் பிரபோ! ஓர் நிலையில் தாங்களே, ஸத்குருவாக இருந்து "நசிகேதஸ்" என்ற அந்தண பிரம்மச்சாரிக்கு உபதேசித்து அருளினீர்கள். அப்படிப்பட்ட கருணை வள்ளலே! ஹே ஸத்குருநாதா! எனக்கும் ஏதாவது, ஓர் மார்க்கத்தை காட்டுங்கள் என வேண்டி நின்றான்!



2

யாமும் அகமகிழ்ந்து, குழந்தாய்! உன்
விவேகம் உனக்கு வழிகாட்டுகிறது. ஏன்
என்றால் திரும்பவும் "உலகபோகம்"
உன்னைப் பற்றவில்லை. வேறெதுவும் கேட்காமல்
"ஜீவன் முக்தி மட்டும்" நீ கேட்டதால், இந்நிலையில்
நீயும் பெற முடியாது. யாமும் தர இயலாது.
நீயும் உலகின் சிறந்த ஞானியாகிய, "ஜடபரதன்"
போன்று, (அவன் மான் ஜன்மா எடுத்தான்) நீயும் ஓர் "பூனை"
ஜனனம் எடுப்பாயாக. அந்த ஜனனமும், நீலகிரி மலையிலுள்ள
"ஹம்ஸ தேவ்" என்ற யோகீஸ்வர் அமை
த்த "ஹம்ஸ்விகார்" ஆஸ்ரமத்தில், தற்காலிகமாக ஓர் "வீர
மாதாவான, ஞானதேஸ்வரி"
அன்னையிடம், அந்த அம்மையின் செல்வப் பிராணிகளாக அனேக
பூனைகள் வளர்கின்றன. அவைகளில் ஒன்றாக நீயும் அமைவாயாக.
உன் காலம் நிறை, பக்குவம் அறிந்து ஓர் "திடஞானி" அங்கு
வருவார். அவர் நாமம் "ஞானிமாயாபரவாகும்" அவருடைய,
"கரஸ்பரிசமும்," அவர் கூர்ந்த திருஷ்டியான,
"நயன தீட்சையும்" அவசியம் கிடைக்கும்.
"இப்போது நீ கேட்ட ஞான பாடம் அப்போது கை கொடுக்கும்"!
"வேறு குருவும்" உனக்குத் தேவையில்லை. அந்த பூனை
ஜனனம், எப்போது நீ கேட்டுப் போன நிலையில், முடிவடைகிறதோ,
அடுத்து திருமந்திர நகரிலேயே, ஓர் அந்தண மரபில் தோன்றுவாய்
நீ ஓர் "ஞானகுருவாயும்" ஆகுவாய் என சாதித்தோம்!



உ

ஹே சுகசொரூபமே! தாஸ்யபாவமே! அதே கஷ்டஜீவன், இப்போது நவம் அடைந்த ஜீவனாக மாறிவிட்டது. அதுவே உனக்கு திருவடி நமஸ்காரமும், மானஸ அஞ்சலியும் செய்து, இருமுறை, "ரிபு கீதை" பாராயணமும், அதி சிரத்தையுடன் கேட்டுவிட்டது! உன்னுடைய கிருபா கடாக்ஷத்தால், அது ஜீவன் முக்தி பெறத்தகுந்தவுடையதாகவும் ஆகிவிட்டது. போன ஜன்மாவில் "குட்டன் நாயராக" இருந்தவன், இந்த ஜன்மாவில், "தத்தேஸ்வரி" வாக்கால், "குட்டி" என்ற நாமதேயம் பெற்றிருக்கிறான். இனி அடுத்த அந்தண ஜன்மாவில், "ஆனந்தன்!" என்ற நாமம் பெற்று, பரசொரூபஸ்திதியை அடைவான். இந்த விஷயம் உன்னிடம் சொல்லவே, யாம் உன்னை அழைத்தோம்.

வைத்தியம்:— ஹே தேவாதிதேவா! மஹானுபாவா! ஜனார்த்தனா! ஹே விடோபா! ஐயா பாண்டுரங்கா! பண்டரிநாதா! புண்டரீகவரதா! ஓ தர்மதேவனே! காலகால தேவனே! இயம நியம தர்மராஜனே! உங்கள் இருவருக்கும், "தேவ தெய்வ வேஷம் கொடுத்திருப்பதால்" உங்கள் கடமைகளை சிறப்பாக செய்து முடிக்கிறீர்கள். ஆனால் எமக்கு எந்த கடமையும் இல்லை! "அந்த ஒன்றின் கருணையிலும், உங்களுடைய ஆதரவிலும், "வேஷம் களைவதே" எம் சேவையாக அமைந்திருக்கிறது. உலகின் எங்கெங்கு ஞானமுத்துக்கள் சிதறி



2

நடக்கிறதோ, அங்கெல்லாம்
"யாம் யாதுத் தோன்றி
மாயையைத்" தொடாமல்,
"உங்கள் தயவுடன்" உங்கள் "ஜாலம்"!
அதாவது, விளையாட்டை மட்டுமே ஏற்றுக்கொண்டு
எந்தப்பிடிப்பும் இல்லாமல், அஐயசமாக விளையாடி, விளையாடி,
அமுந்துக்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கிறோம். யாம்
யாமே வேஷம் போட்டுக் கொண்டாலும், உலகின் ஜீவநதியில்
அவர்கள் "நடை" "உடை" "பாவனை"களை
அனுசரிசகாமல் விளையாடிக் கழிக்கிறோம். எம்முடைய இந்த
"ஜீவ, பர, போத" விளையாட்டுக்கு, உறுதுணையாக
இருப்பவன், "கபடநாடக சூத்திரதாரியாகிய" எமதய்யனாகிய
"கமலக்கண்ணன்" என்னும் "திருடனும்"
"விளையாட்டில் அலைவோம்"!!!
ஞான "ஸிவய அனுபவத்தில் அது"! ஆவோம்!!!

இதை மெய்யறிவால் உணர்ந்தவர் உணர்வர்!

இதை மனம், புத்தி, சிந்தனையால் எவரும் உணரமுடியாது!!!

"அனைத்தும் ஒன்றே"! அது நலமே!

அது சுகமே! அது யாமே!

பாபா

"அது நீங்களே"!!!

இது ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!



# "ஓர் உண்மை"!!!

## "அதை,"

## "கண்டாரும் கிடையாது!"

## "விண்டாரும் கண்டதில்லை"!!

இதுவே பிரமாண உண்மையாகும். ஆனால் இதன் ரகசியம் என்னவென்றால்???

## "கடவுள் காண முடியாது"!

## "தேவதெய்வங்கள் காணலாம்"!

உணரக்கூடியது கடவுள்! மனக்கண்ணால் (ஞானக்கண்களால். அல்ல) அதாவது **"கற்பனைக்கண்ணால்"** காணக்கூடியது, தேவ தெய்வங்களாகும்!

1. ஞான நேத்திரம் அது கண்கள், அது மனம் வெளியே செல்லும் **"ஜன்னல்கள்"**, அது மன வெளித்துவாரம்!

2. அறிவு நேத்திரம், அது ஜவத்தில் மறைந்திருக்கும், உப்பு, சர்க்கரை, போன்றவைகளை, **"சுவைத்து"** உணரும் தன்மை போல (சொல்லி விளக்கவோ, தொட்டுக் காட்டவோ, சுட்டிக் காட்டவோ எவராலும் முடியாதது போல்) "சுவைப்பவரே உணர்வார்! ஏனையோர் உணரார்!"



உ

முன் சொன்னது போல தேவ தெய்வங்களை
கோடானுகோடி பக்தர்களும், ஆழ்வா
ராதிகளும், நாயன்மார்களும், மற்றும்
ஸ்ரீபக்த விஜய கதைகளின் பக்தர்களும்,
அனேக தபஸ்விகளும், மஹரிஷிகளும்,
புராண இதிகாசங்களில் கூறப்பட்ட
"அனந்த ஸ்ரீமஹான்களும்" தேவதெய்வங்களை கண்டும்,
பேசியும், விளையாடியும், அளவளாவியும் ரஸனையோடு,

**"இருந்ததும்"** இப்போது **"இருப்பதும்"**
**"ஸத்தியப்பிரமாண உண்மையாகும்"**

"தேவதெய்வங்களை காண்பது":- இது ஊனக்கண்களால்
முடியாத காரியம். "மனக்கண்ணால் முடியும்" அந்த மனமானது,

1. நாமரூப குண ஜகத்தில் மயங்காமல் இருக்க வேண்டும்.
2. உடல் உணர்ச்சிக்கு அடிமையாகாமல், தேவ தெய்வ நாம, ரூப, குண, உணர்விலேயே மயமாக வேண்டும்.
3. மண், பொன், பெண் ஆசை விட்டொழிந்ததாகவும். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை கழிவியதாகவும். ரஜஸ், தமஸ் குணம் விட்டு, ஸத்வ குணம் ஒன்றை மட்டும் ஏற்றதாகவும். ஷேஷிகளையும் கனவாக கருதும் திடஉணர்வாகவும் இருக்க வேண்டும்.
4. மனம் பற்றிய "ஒரே (தெய்வ) நாம ரூப குணத்தோடு" மட்டும் இருந்து கொண்டு ஏனைய தேவதெய்வம் அனைத்தும் "இந்த ஒன்றே" என்ற திடமான உணர்வுடன் "புற உணர்ச்சிகள்" முழுவதும் கெடுக்கப்பட வேண்டும்.
5. ஏனைய தேவ தெய்வ "துவேஷம்" அணுவளவும் கூடவே கூடாது.
6. நீ ஏற்றும் தெய்வ கற்பனை "அசைக்க முடியாத நம்பிக்கையுடனும்" மற்றும், உடல் உலக உணர்ச்சிகள் முழுமையாக அழிந்து கெட்டால், உன் தெய்வம் உன்னுடன் பேசும் விளையாடும்.

"கடவுள் உணர்வது":- இது அறிவுக்கண்ணால் உணர்வதாகும். இங்கு
உன் கற்பனை தெய்வ வடிவை மாயை என்றுதள்ளி விட்டு, உன் ஜீவ வடிவை
மனதில் சிவமாகவே கருதி, "மாயையற்ற நம் தெய்வமும், மனமற்ற
நாமும், சிவாத்தபரமும் ஒன்றென மெய்அறிவினால் உணர்ந்து"
**"சும்மா சுகமாக"** இருப்பதே ——— பாபா.
கடவுள் உணரும் நியமாகும்.



ஓம்

(ஸத்தியவாக்கை)

ஸத்தியம் பேசு. தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால் தர்மம் நிலை பெறும்!"

# "ஸ்ரீ ஞானசத்குரு திருவடி துணை!!!"

அன்பும், அறிவும், பண்பும், பணிவும் நிறைந்த எம் ஆனந்தக்குழந்தைகளே!

"சொல், செயல்!" உங்கள் அடக்கத்திலே, இகத்திலும் அடங்கி இருந்து கொண்டு பரத்திலும், (தெய்வீகத்திலும்) நலமும், சுகமும், பெற்று வாழ ஆசி கூறுகிறேன்!

உங்கள் "சொல், செயல்!"களினால் எவரையும் "அடக்க!" வேண்டாம். அவை அழிவையும் துக்கத்தையும் உண்டு பண்ணும்!

"ஆகவே இவ்விரண்டிலும் கவனம் தேவை"!

எம் பணிவான குழந்தைகளே! உங்கள் கேள்வி யாவது?

குருதேவா!

கடந்த 10 ஆண்டுகளாக, திரு அண்ணாமலை ஆலய மூர்த்தியாகிய "ஸ்ரீ அருணாசலேஸ்வரர்," இங்கிருந்து வெளியேறி, திருக்கயிலையில் தங்கி விட்டதை, தாங்கள் திருவாக்கால் கேட்டதும், அதிர்ச்சியும், துக்கமும் அடைந்தோம். இப்போது சித்தர்களும், யோகிகளும், மஹா புருஷர்களும், (குகை நமச்சிவாயர், அருணகிரியார்



உ

இன்னமும் கண்களுக்குத் தெரியாத மஹா சூட்சும புருஷர்களும் (ஸ்வாமி) "ஸ்வாமி" சென்றவுடன் அவருடனே சென்று விட்டார்களா? இது எங்களுக்கு மிக மிக மிக வருத்தத்தக்க விஷயம்! தயவு செய்து இதன் ரகசியங்களை எங்களுக்கு, சற்று விபரமாக தெரிவிக்க வேணுமென்று மிகவும் பணிவாக கேட்டுக் கொள்கிறேன்!

"பதில்:— அடங்கி இருப்பதலே ஆனந்தம் அடையும் குழந்தைகளே! "இது கலியுகம்." அண்ணாமலை என்றால் "நினைத்தால் முக்தி தரும் க்ஷேத்திரம்". மேலும் இந்த ஒரு க்ஷேத்திரம் மட்டும் "குரு"! (குருவும் தெய்வமும்) இணைந்திருக்கிறது. இது அக்கினி க்ஷேத்திரமாகவும், "ஞான" பூமியாகவும் விளங்கப்பட்டது. மேலும் தமிழ்நாட்டு ஆலயங்கள் அனைத்தும் (சைவம் & வைஷ்ணவம்) "ஆகம"விதிப்படியும், "பிராண" ப்ரதிஷ்டை செய்த நிலையிலும் அமைந்திருக்கிறது. வடக்கே உள்ள அனைத்து ஆலயங்களும் "பக்தர்களுக்காக" பக்தர்களே உருவாக்கியதாகும். நம் தென்னாட்டு ஆலயம் "முக்கியமானவை" யெல்லாம் "சித்தர்களும், ஞானியர்களும் சமாதி" அடைந்த "சக்தி வாய்ந்த ஆலயங்களாகும்"! ஆதலேதான் நம் ஸ்ரீ அடியார்கள், இறைவனை அழைத்து போற்றி சொல்லும் போது, திட உணர்வோடு சொல்வதாவது? "தென்னாடுடைய சிவனே போற்றி" என ஆரம்பித்து, "என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற பரந்த நோக்குடன் முடிப்பார்கள்!



உ

இதில் ஓர் ஐக்கியம் என்னவென்றால்? பிராணப்பிரதிஷ்டையுடனும், ஆகம முறைப்படியுடனும், அமைந்த நம் ஆலயங்கள், பாடல் பெற்ற ஸ்தலங்களாகவும்; ஸித்தர்கள், யோகிகள், ஞானியர்கள் இவர்கள் "ஆன்ம ஒளியுடன் சமாதி" ஆலயமாக இருப்பதால், அதிக அதிக அதிக சக்தி வாய்ந்தவைகளாகும். இதனால் என்ன உணர்கிறோம் என்றால், ஸித்தர்களும், யோகிகளும், ஞானியர்களும் "இல்லை" யென்றால், அங்கு "தெய்வம் இல்லை" அந்த தேவா தெய்வங்கள் இல்லையென்றால், "ஆலயங்கள்" தேவையில்லையென்றாகிவிட்டது! இதில் ஓர் உண்மை! மேலே கூறிய ஸ்ரீ மஹான்களோ, தேவ தெய்வங்களுக்குள் "ஆட்பட்டு" அந்த தேவா தெய்வங்களோ, "தாங்கள்" ஆனவர்களாகும். அவர்களுக்கு இங்கு இருப்பு இல்லையென்றால் தெய்வங்கள் எப்படி இருக்க முடியும்? ஆலயங்கள் இருந்து என்ன பயன்? இது இக்கலியில் இப்படி நடக்க வேணுமென்பதே விதி! இதை எவரும் மாற்றவோ, மறுக்கவோ, விலக்கவோ முடியவே முடியாது! ஆகவே அன்று ஸ்ரீ அடியார் சொன்ன வாசகம்:—

"ஞானத்தபோதனரை "வா" "போ" என்றழைக்கும் அன்னமில்லை!"

அன்று இன்று அது எப்படி மாறிவிட்டதென்றால்?

"ஞானத்தபோதனரை வர ஒட்டாமல் தடுக்கும் அன்னமில்லை"

என்று ஆகிவிட்டதே! என் செய்வோம்?



அண்ணாமலை நடுக்கவும் இல்லை! இங்குள்ள அருணாசலேஸ்வரர் மறுக்கவும் இல்லை!! "இக்கலியுக ஞானதோஷம்" நிறைந்த ஜீவர்கள் நாங்கள் என்ன செய்கிறோம், என்ன செய்ய வேண்டும், என்ற விபரம் தெரியாமல் தங்கள் "அறியாமையால்" தடுக்கிறார்கள் என்று சொல்வதைவிட, தடுத்துத் தான் ஆக வேண்டும்! "இது கலியுக நியதி! கலியுக விதி!!"

1972ல் இப்பைத்தியம், திருஅண்ணாமலை வந்த சமயம், மலையை சுற்றியும், அனேக ஸ்ரீமஹான்கள் தவம் செய்யும் ஆனந்த காட்சியை கண்டோம். மேலும் "கிரிவல மக்கள்" அதிகம் இல்லை! ஆனால் ஆயிரக்கணக்கான சித்தர்களும், மஹான்களும், "சூட்சும வடிவில்" சுற்றுவதை உணர்ந்து அவர்களிடம் ஆசியும் பெற்றிருக்கிறது!

1982ல் இப்பைத்தியம், திருஅண்ணாமலை வந்த சமயம், கிரிவலம் வந்த சமயம், சிவமஹான்களே தவம் செய்த நிலையிலும், குணதோஷங்களால் பாதிக்கப்பட்டிருப்பதையும், கண்டோம். அதுசமயம் கிரிவல மக்கள் கூட்டம், கொஞ்சம் அதிகமாக இருந்தது. நூற்றுக்கணக்கான சூட்சும சித்தர்களும், மஹான்களும், கிரிவலம் வந்தனர். அவர்களும் இன்னமும் சிவ காவலங்களில் புறப்பட ஆயத்தமானதை உணர்ந்தோம்.

1992ல் இப்பைத்தியம் ஸ்ரீமதி புனிதையுடன் சிவ அன்பர்களுடன், கிரிவலம் வரும் போது, "தவம் செய்யும் மஹான்கள் எவரும் இல்லை"! ஆனால் மஹான்களைப் "போல" அனேகர் இருந்தனர். ஆனால் சூட்சும சித்தர்கள் சிலரை மட்டும் தரிசித்து ஆசி பெற்றுச் சென்றோம்!

1996ல் இப்பைத்தியம், அன்பர் சிலருடன் கிரிவலம் வரும் சமயம், ஒன்றிரண்டு சூட்சும சித்தர்கள் தவிர வேறு எவரும் காணோம். அன்றும் "மஹான்களைப் போல" கூட்டம் அதிகம் தோன்றியது.



உ

அன்புக்குழந்தைகளே! இந்த வைத்தியம்,
**2000** வருஷத்தோடு வெளியே
அனுப்பப்பட்டது! இல்லை! இல்லை! இல்லை!
யாமே, "**போதும்**"! என்ற நிறைவோடு,
வெளியேறிக் கொண்டோம். யாம் சென்றது,
அண்ணாமலையோ, அருணாசலேஸ்வரரோ, வேறு
எந்த "அம்மாகருமம்", காரண காரியம் இல்லவே இல்லை!

2000 வருஷத்திற்கு அப்புறம் ஒருமுறை திருஅண்ணாமலை வந்த
சமயம், கிரிவலம் சென்றோம்! எம் வரவு தெரிந்தோ அல்லது
எம் இறைவனால் அனுப்பப்பட்டோ, பல சூட்சும மஹான்களை
தரிசித்தோம். "ஆசி வழங்கியும், ஆசி பெற்றும் சென்றோம்.

ஓம் அன்புக்குழந்தைகளே! நீங்கள் உங்கள் கேள்வியில் கேட்டபடி, குகை நமச்சிவாயரோ, அருணகிரிநாதரோ,
மற்றும் அனேக மஹான்களோ (சூட்சும சரீரிகள்) நீங்கள் மனம்
"**உருக**" வேண்டினால், அவசியம் உங்கள் உள்ளத்தில்,
தாமே தோன்றுவார்கள். அதைப்போலவே, ஸ்ரீ அருணாசலேஸ்வரரும், அவசியம் உங்கள் "**உள்ளத்தில்**"!
குடியிருப்பார்கள். அவர்களை இனி நீங்கள் "**வெளியே**
தேடவும் வேண்டாம்! காணவும் முடியாது!!" அவர்கள்
அனைவரும் திருஅண்ணாமலையை விட்டு வெளியேறி வெகு
காலமாகி விட்டது!! இந்த நிலைக்கு எவரும் பொறுப்பாகார். காரணம், ஆலயமும், ஆஸ்ரமங்களும், அதை
நிர்வாகம் பண்ணும், "மஹான்களாய் போல் இருப்பவர்களும்
**வியாபாரம்! விளம்பரம்! ஆடம்பரம்! பட்டம்! பதவி! கௌரவம்!**



# "அஹங்காரம்"! "அதிகாரம்"! மான "அவமானம்"!

ஆகிய இத்தகைய, கொடூர வக்ர குணங்களுக்கு
ஆட்பட்டு, "பீடாதிபதிகளாகவும், மடாதிபதிகளாகவும்,
சந்நியாசிகளாகவும், சாமி "யார்"????
என்ற கேள்விக்குறிகளாகவும், மஹான்களாய் "போல்",
சித்தர்களாய் "போல்", ஞானியர்களாய் "போல்"!
இருக்கிறீர்களேயன்றி, "உண்மையானவர்கள் இல்லவேயில்லை"!
ஒன்றை உணருங்கள் யாம் பைத்தியமாகிய பீடாதிபதியும் அல்ல, மடாதிபதியும்
அல்ல, சந்நியாசியும் அல்ல, சாமியாரும் அல்ல, மஹான்களும் அல்ல,
சித்தனும் அல்ல, ஞானியும் அல்ல, ஊர் உலகுக்கு பயன்படாத,
பயன்படுத்தமுடியாத, எதற்குமே உதவாத ஓர் அந்தப் பைத்தியமாகும்.

ஓர் முக்கிய செய்தியாவது?

இந்த ஞானபூமியான திருஅண்ணாமலையும், இங்கு உள்ளவர்களும்
நலம் பெற வேண்டுமானால் ஒரு வழி உண்டு! அது ஒரே வழிதான்!
"எங்கும், எதிலும், எவ்விடத்தும் திருவண்ணாமலை" யென்ற
பெயர் மாற்றப்பட வேண்டும். எங்கும், எதிலும் எங்கு நோக்கினும்
யார் பேசினாலும், யார் கேட்டாலும் அனைத்திலும்.
"திரு அண்ணாமலை"! யென ஒலிக்க
வேண்டும். அக்காலமே திரு அண்ணாமலைக்கு ஓர் மஹான் சாபம் தீர்ந்த
நாளாகும்! அது நடக்குமா???
குழந்தைகளே முயன்று பாருங்கள்! [signature] பாபா.



ஸத்தியம் பேசு. ஓம் (ஸத்தியவாக்கை) தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால் ; தர்மம் நிலைபெறும்"!

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம்" ஓம்!

"அகம்பிரம்மம், ஜகம்பிரம்மம்";

"அகமே எல்லாம்"!

"ஜெகம், பரமும், ஜீவர்களும்,

"சிறிதும் இல்லை"!

"இறைநிலையும்"!!!!!

"குரு நிலையும்"!!!!!

இடம்:— "அன்பின்குடில்" & "சித்தேஸ்வரம்"!

காலம்:— 3-7-2005 ; ஞாயிறு நாள் இரவு 12 மணி

பங்கேற்போர்:— அருணைசலேஸ்வரர்/ ஸத்குரு/ பரமகுரு/ ஆதிகுரு/ "தட்சிணாமூர்த்தி"

இவர்களுடன் ஓர் உதவாக்கரை பைத்தியம்/ அண்ணாமலையார்



உ

# "அன்பும்! அறிவும்"!

நிறைந்த எம் பிரம்மானந்தக் குழந்தைகளே! குற்றம் குறை காணாமலும், விருப்பு வெறுப்பு இல்லாமலும், பேதம் இல்லாமலும், நீங்கள் உங்களுக்குள் அடங்கி இருந்தாலும்; "வாக்குசெயல்"களில் அடங்கி இருந்து கொண்டு எங்கும் எதிலும் எந்நிலையிலும், அடக்க முயலாமல் இருந்தால்; "ஸ்வயஞானுபவம்"! உங்களை இயல்பாகவே ஆட்படுத்தி "அது நாம், நாம் அது"! என ஆகுவீர்கள் எனக்கூறி வாழ்த்தி ஆசி வழங்குகிறேம்!

ஆனந்தத்தின் அந்த குழந்தைகளே! இம்முறை உள் சுற்றுதல் (சஞ்சாரம்) சற்று அதிகம்தான். கொடைகானல், ஊட்டி, என்றும், பெங்களூர், ஆறு, வேலூர், திரு அண்ணாமலை என்றும். எப்படியோ இப்பதுமையை, அவன் இயக்கினான்! இது இயங்கியது! இதை போதும் என்று, என்று நிறுத்தப் போகிறேனோ. அது அவனுக்கே தெரியும். எழுத வேண்டாம், எழுத வேண்டும் என்பல முறை "சங்கல்பம் செய்வோம்". அதுவும் "பொய் பொய்"! என ஆகிவிட்டது. அதுவும் என்று "உறுதி" என ஆகுமோ? அதுவும் அவன் அறிவான். "அதைச் சொல்ல மார்க்கம் இல்லை". அது செயலற்றதாகிவிட்டதால், அதன் அம்ஸ சொரூபத்தில் இருந்து வந்த, எமக்கும் செயல்பாடு இல்லைதான். ஆனால் எம் குழந்தைகளாகிய உங்களுக்கு எம் செயல்பாடு தோன்றிக்கொண்டுதான் இருக்கிறது. அதுவும் கூடிய சீக்கிரமாக? "மறையலாம்! மறைக்கலாம்! பின் மறக்கலாம்"!



அன்று கிழ்மேறு, "திரு அண்ணமலை" சம்பவம், ஓர் "புனிதம்"!

ஆகவும், எவரும் அறியமுடியாத, தெரியமுடியாத, "புதிராகவும்"! முடிந்தது போலும்?

அதன் காரண காரியம், அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் "ஞான அருணாஸ்சலேஸ்வரரும்," அங்கு அமர்ந்த நிலையில் "திரு அண்ணமலை"! யாரும், சொரூபமான, அனைவரையும், ஆட் அறிவார்கள்! உணர்வார்கள்! உங்கள் "கொள்வார்கள்!" (அதாவது ஆண்டு கொள்வார்கள் என்றும், உங்கள் கருணையோடு "ஆண்டு கொண்டு", உங்கள் அறியாமையை கொள்ள வேண்டும்") எனபொருள் கொள்வார்கள்"

ஸ்ரீ அருணாஞ்சலேஸ்வரர்:- "தெய்வம்"!

திரு அண்ணமலையார்:- "ஸத்குரு"! என உணருங்கள்!

திரு அண்ணமலை (1-7-2005)

திருஅண்ணமலையில் அதிகாலை4மணிக்கு வெளியேறி, அன்பின் குடிலுக்கு வந்து சேர்ந்தோம். திருஅண்ண மலையில் வைத்து, அன்புவடிவாயும், ஸத்தாகவும், உள்ள குழந்தைகள் கேள்விக்கு நாமதேவன் (திருடன்) கண்ணன் கருணையால், அவன் உணர்த்த உணர்ந்து, இவ் ஸத்திய வாசகங்களை, வரி வடிவில் எழுதியும் தொகுத்தோம். அதில் முடிந்த முடிவாக கொடுத்த உரையில், "திருவண்ணமலை"! யென்ற வாசகம் மாற வேண்டும் என்றும், அதற்கு மாறாக, "திரு அண்ணமலை"! என திருத்தப்பட வேண்டும் என்றும், எழுதியிருந்தோம்.

"திரு அண்ணமலை"! அவனால் அவனுக்கே தொகுத்தப்பட்ட ஸத்திய வாசகம். இதுவே பிரமாண உண்மை!



2

எம் ஆனந்த சொரூபங்களே!

3-7-2005.

ஞாயிறு இரவு "ஹரிதுயில்" (ஹரிதுயிலென்றால்
தம் "அறிவின்" சொரூபத்திலேயே
ஒன்றி, "அதன்" மயமாகவே இருத்தல்)
கொண்டிருந்தோம். சுமார் நள்ளிரவு மணி 12 மணிக்கு
"கொழந்தே" என ஓர் வயோதிக நிலையில்,
பல்லில்லாமல் அன்பாய் அழைக்கும், ஓர் "முதியவர் குரல்"
எம் அறையில், கதவு ஓரமாக நின்று கனிவாகவும், கணீர் என்றும்,
ஒலித்தது. வழக்கமாக எம்வாக்கிலிருந்து வரும் ஓசையாக,
"நாராயணா" என்ற ஓசையாக ஒலித்து எழுந்து, குரல் வந்த
திசையை நோக்கினேம். ஓர் அதிக முதியவர் கையில் தடியுடன்
வாசல் ஓரமாக நின்றிருந்தவர், மெதுவாக நகர்ந்து நகர்ந்து,
நடந்து வந்து, எம் அருகில் வந்ததும், இப்படி யாம் அமரவாமா?
என அனுமதி கேட்டார். உடனே யாம் சரீ வென எழுந்து, அவரைக்
கைத்தாங்கலாக, மெதுவாக, படுக்கையின் மீது அமரச் செய்து அவர்
கைத்தடியை வாங்கி ஓர் ஓரமாக வைத்துவிட்டு, அவர் இருகரங்களையும்,
எம் இருகரங்களாலும், மெதுவாக பற்றி வருடிக்கொண்டு, அக்
கரங்களை முத்தமிட்ட நிலையில், கண்களில் ஒற்றிக் கொண்டு,
ஐயா! நலம் தானே? என்றேம்! எம்மை யார் என விசாரிக்
காமல், நலம் தானா என்றால், என்ன பதில் சொல்ல முடியும்? யாம்
சிரித்துக் கொண்டே, "காண்பவனும், காணும் பொருளும்,
"ஒருவனும்" அந்த "ஒருவனுடையதும்"
என ஆன பின்பு, அங்கு "மற்றொன்று இல்லாதன்மையினால்",
அங்கு வேறு கேள்விக்கு இடம் இல்லாமல் போயிற்று, ஆகவே
கேள்வி தேவை இல்லை.



உ

வந்தவர்:— என்னதான் ஒருவன், ஒருவனுடையது என ஆனாலும் "விவகாரம்" என வந்துவிட்டால் விளக்கம் வேண்டாமா?

வைத்தியம்:— விவகாரம் இன்னமும் தொடரவில்லையே பின் விளக்கம் எதற்கு?

வந்தவர்:— விவகாரம் ஆரம்பமாகிவிட்டது எனத்தான் வைத்துக்கொள்ளேன்? விவகாரம் ஆரம்பமானதால்தானே, யாம் உன்னைத் தேடிவந்தோம்!

வைத்தியம்:— தாங்களுக்கு விவகாரம் தோற்றுகிறதுபோலும்? இங்கு அதற்குரிய அறிகுறியே தென்படவில்லையே?

வந்தவர்:— (சற்று சினந்த நிலையில்) நீ எவரிடம் பேசுகிறாய் எனத் தெரியுமா? சற்று சிந்தித்துப் பதில் சொல்?

வைத்தியம்:— (கடகடகடவென சிரித்துக் கொண்டே) ஐயா! எம்மிடம் சிந்திக்கும் மனமோ, கற்பனை பண்ணும் புத்தியோ, அவ்விரண்டும் தாங் இருப்பதாக தெரியவில்லை. ஆனால் சொல்லுவோம். ஆனாலும் நாங்களிடம் இல்லையென்றே சொல்லுவோம். வாங்கி வந்ததைத் தாங்கள், எவரிடமோ "இரவலாக" வாங்கி வந்ததாகத் தெரிகிறது. அதைச் சற்று விளக்கிடவே, யாமும் தாங்கள் எங்கு வாங்கினீர்களோ, அங்கேயே வாங்கிட உங்களிடம் சற்று விளையாடுவோம்!

வந்தவர்:— யாம் விளையாட வந்தோம், என்று சொல்கிறாய்? அதைச் "விஷயம் ஏது?"

வைத்தியம்:— உம்மிடமும், எம்மிடமும், இல்லாத ஒன்றை எம்மிடம் சார்ந்த "விஷ்ணு" தானே? "படம்" போட்டு காட்டுகிறீர்களா? உனக்கு ஆத்திரம்

வந்தவர்:— யாம் இதனை சினந்து சொல்லியும், உனக்கு ஆத்திரம் வரவில்லையா? ரோஷம் அற்றவனா நீ?

வைத்தியம்:— அது என்னவில்லை? அது எங்கு கிடைக்கும்? அது தாங்களிடமே கிடையாதே பின் எப்படி எம்மிடம் அது இருக்கும்? அதனால் தான் உம்மை, "பித்தா/பேயா" என அன்பர்கள் அர்ச்சனை செய்கிறார்கள். அதை நீரும் ஆனந்தமுடன் ஏற்றுக் கொள்கிறீர்!



உ

வந்தவர்:— (இவ்வார்த்தையைக் கேட்டதும், திடுக்கிட்டவராய் தம்மை நாடி வந்து நோக்கினார். அவரை அறியாமலேயே, அவர் மாயை கழன்று ஸ்வரூபியாய், எம் அருகே அமர்ந்த நிலையில், ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஆனந்தத்துடன் காட்சி தந்தார்.) ஹே சுகசொரூபமே! நீ எப்படி எம்மை மாற்றினாய்? உன்னிடம் எங்கள் மாயை இல்லையே! பின் எப்படி இந்நிலை ஏற்பட்டது?

வைத்தியம்:— எம்பெருமானே! கருணைக்கடலே! கிருபா சமுத்திரமே! ஜகத் ரக்ஷகா! இவ்வெளியேனை மன்னிக்கவும்! தாங்களிடம் சற்று அதிகமாகவே விளையாடிவிட்டோம் (கண்ணருவி கொட்ட எம்பெருமான் திருவடிகளில் சாஷ்டாங்க தண்டனிட்டு, அவர் பொற்பாதங்களை இருகரங்களாலும் இறுகப் பற்றிக் கொண்டு, ஆனந்தம் பொங்க சிரித்தோம்!) இனி அவரைப் "பரமன்" என்றே அழைப்போம்! எம்பெருமானே இவ்வேழையை நாடி வந்த காரியம் என்ன?

பரமன்:— ஹே சுகசொரூபமானவே! எப்படி எம்மாயையை விலக்க முடிந்தது உன்னால்!

வைத்தியம்:— எம் இறைவா! இது ஒன்றும் பெரிய காரியம் இல்லையே? உம் பிடியில் இருப்பதோ, "போகமாயா" ஆனால் எம்மிடம் இருப்பதோ, "யோகமாயா"!! அது உம் வசம் ஆனதன்மையினால், அதை எடுக்கவும் விடவும் உமக்குத் திறமை உண்டு. ஆனால் எம்மிடம் "ஸ்வயமாக அடங்கி இருக்கும் யோகமாயா" எம்மை அறியாமலேயே, உம்மையும் பாதிக்காமலேயே, உம்மை "எமக்கு மட்டும் வெளிப்படுத்திவிடும். ஆனால் இக்காரியம், "மஹாரகஸ்யமாக" நடத்தப் படும். இது தாங்கள் அறிந்ததே! இருந்தாலும்



உ

அறியாதவர் போல, எம்மிடமே நடித்துக்
காட்டி, எம் வாக்கை கிண்டி பார்க்கிறீர்
போலும்! "யாமோ ஓர் திருடன்"!

பரமன் :- ஓ ஓ ஓ ஓ அவனைச் சுட்டிக் காட்டு
கிறீரா! அவன் உம் உடன் இருக்கிறானா! உம்முள்
இருக்கிறானா!

வைத்தியம் :- பவ்யமாக சிரித்துக் கொண்டே! இது நல்ல கேள்வி!
எம் முன்பும், எம் உள்ளும், வைத்துக் கொண்டே இப்படி
ஓர் கேள்வியா?

பரமன் :- புரியவில்லையே! சற்று விளக்கு பார்க்கலாம்?
அவன் வேறு! நாங்கள் வேறு! உங்கள் நிமித்தம்

வைத்தியம் :- எம் முன் ஸ்வரூபியாய்
உள் இருந்து இயங்குவது அவனே! எம்மை பரிக்ஷிப்பதும் அவனே! ஆனால்
உரையாடி, எம்மை
"உண்மையில் எமக்கு இருப்பு ஏது"? "அவனே நீ! நீயே அவன்!"

பரமன் :- இப்படி பிடி கொடாமல் பேசுவதற்கு எவரிடம்
கற்றுக் கொண்டாய்?

வைத்தியம் :- உம்மிடமே!!!!! அவன் வேறு நாங்கள் வேறல்ல!
"இயக்கம் "உம்" சொரூபம்! இயக்கமற்றது "எம்" சொரூபம்!!

பரமன் :- சரி சரி யாம் வந்த காரியத்தை கவனிப்போம்! இம்முறை
திரு அண்ணாமலை நீ வந்த சமயம், நாரதர் கலகம் செய்வது போல்,
ஓர் குழப்பம் விளைவித்து விட்டு வந்து விட்டாயே! அதுபற்றி
கேட்டுப் போகவே வந்தோம்?

வைத்தியம் :- ஏன் ஸ்வாமி? நாரதர் கலகமா? அந்த நாரதர்
கலகமும், நன்மையில் தானே முடியும்? எம்மை எப்படி
அவர்க்கு ஒப்பிடுகிறீர்?

பரமன் :- பின்னை இல்லையா? யாம் ஆலயம் விட்டு சென்று
"10 ஆண்டுகள்" ஆகிவிட்டன என்றும். எம்மைப் பின்
பற்றி "ஸ்ரீமஹான்களும்" வெளியேறி விட்டார்கள்
என்றும் சொல்லி ஓர் பயத்தை உண்டு பண்ணி அங்கு உள்ள
அன்பர்களை! ஓர் கலக்கு கலக்கிவிட்டு
வந்துவிட்டாயே! உண்மைதான் கேட்கிறோம்.



உ

(ஓர் பொய்யான சிரிப்புடன், கோபத்தையும் சற்று வரவழைத்துக் கொண்டு இவ்விதம் கேட்டார்)

எம்இறைவன் "யாம் ஆலயம் விட்டு வெளியேறியது"!!!!

நீ கண்டாயா? உணர்ந்தாயா? அதை உன்னால் நிரூபிக்க முடியுமா?????

வைத்தியம்:— (கட கட கட கட கட கட கட என பலமாக சிரித்த வண்ணம், எம் அகண்டாகார விருத்தியில் இருந்து கொண்டு) "எல்லாம் வல்ல ஈசனே"!

"சத்திய நிலையில் நீ போவதும் இல்லை! வருவதும் இல்லை!! நீ இல்லாத இடம் இல்லை தான்"!!!

இது "அன்புக்கும், தர்மத்துக்கும்"! "கட்டுப்பட்ட நிலையில்"!

ஆனால் இன்று "அவ் ஆலயத்திலும், அம்மலையைச் சுற்றிலும்"!!!!! "என்ன நடக்கிறது? எப்படி இருக்கிறது"?? (கவனிக்கவும்)

"வியாபாரம்"! "விளம்பரம்"!! "புகழ்"! "பட்டம்"! "பதவி"! "காமம்"! "அதிகாரம்"! "அஹங்காரம்"!

இவைகளால் இந்த கலி தோஷத்தால், ஆக்கிரமிப்பு ஆனபின், "உனக்கும் மஹான்களுக்கும் அங்கு இடம் ஏது"???????



உ

என்னதான் ஆகம விதிமுறைப்படியும்,
மந்திரபிரதிஷ்டை, பிராணப்பிரதிஷ்டை
செய்து, தேவ தெய்வங்களாகிய உங்களை
"ஸ்தாபிதம் செய்தாலும்", அந்தந்த இடங்களில்
"ஸ்ரீமஹான்கள் "சமாதி"! ஆக
இல்லையானால் உங்களால் அங்கு இருக்க முடியுமா"??????
இதனை என்ன உணர்கிறோம் என்றால்???

"ஸ்ரீமஹான்கள்"! இல்லையென்றால் அங்கு
"தேவதெய்வங்கள் ஏது"?
"தேவதெய்வங்கள் அங்கு இல்லையானால்"??????????
ஆலயம் ஏன்
ஆலயங்கள் இருந்தும் அது கட்டமண்தானே.

பரமன்:- ஹேதாஸபாபா! நீ கூறியது அனைத்தும் ஸத்திய
வாசகமே! இது கலிதோஷம். இப்படித்தான் நடக்க
வேண்டுமென்ற "விதி"! ஆனால் விதிக்கும்,
நியதிக்கும், அப்பாற்பட்டயாம், அந்த ஆலயத்தை
விட்டு சென்றதை நீ கண்டாயா? அல்லது வேறு
எவராவது சொன்னார்களா? அல்லது வேறு எதை
ஆதாரமாக வைத்து" இப்படி சொல்கிறாய்? அதை
எப்படியென்று உன்னால் நிரூபிக்க முடியுமா? ஆனால்
உன் வாக்கு ஸத்தியமே வரும்." அப்படியில்லாமல்
நீ இவ்வாறு உறுதி அளிக்கமாட்டாய்? அதன் விப
ரத்தை சற்று சுருக்கமாக சொல்பார்ப்போம்?



உ

வைத்தியம் :- எம்பெருமானே! மஹாதேவா! யாம் இப்போது சொல்லும் வாசகங்களுக்கு "எவரும் பொறுப்பில்லை"! அனைத்தும் உம் அம்சமே! அனைத்தும் உம் பொருளே! அனைத்தும் உம் இயக்கமே! ஆனால் அனைத்தும் "அவரவர் வினையால்" "அவரவர் கர்மாவை ஒழுங்காக செய்கின்றனர். ஆகவே இவற்றின் பொறுப்பு எவருக்குமே கிடையாது! இது பிரமாண உண்மை! "இரண்டு" நிகழ்ச்சிகள் தான் குறிப்பிடத்தக்கவை! ஆனால் அதுவும் "கலி தேவதையே" "உன்னால் தான் நடைபெற்றது! வேறு எவரும் காரணம் இல்லை!!

1. "பதினாறு கால் மண்டபம் தீப்பற்றி எரிந்தது!"

2. "கொடிமரம் சாய்ந்தது!"

பரமன் :- இதன் பொதுவான காரணம் எது என்று சொல்ல முடியுமா? எவரும் பாதிக்கப்படாதது இல்லையென்றால், சொல்லவாம். இல்லையாயின் விட்டுவிடு!

வைத்தியம் :- ஹே பரமபுருஷா! இங்கு ஓர் உண்மையின் அடியார் தம் ஸத்திய வாசகத்தில் "ஞானத்தபோதனரை வா என்றழைக்கும் அண்ணாமலை" எனப்பாடினார். ஆனால் யாம் அதைச் சற்று மாற்றி அமைத்தோம். அதாவது "ஞானத்தபோதனரை போ" எனச் சொல்லும் "அண்ணாமலையல்ல" "முன்பு எட்டாவது பக்கத்தில் குறிப்பிட்டுள்ள தவிதோஷ "எட்டுக் கோபுரங்கள்" எனச் சொல்லுவோம்.



உ

பரமன் :- (கை கொட்டி சிரித்துக் கொண்டே) எம் அன்பான சுக சொரூபமான பாபாவே! வெகு அருமையாக சொன்னாய். எந்த ஜீவர்களையும் "பாதிக்காதபடி, புகைக்காதபடி, எவரையும் காட்டாதபடி, "எம்மையே" சுட்டிக் காட்டிவிட்டாய். வெகு அற்புதம்! வெகுவெகு ஆனந்தம்! "அனைத்தும் எம் உண்மை என்றும், அனைத்தும் எம் இயக்கம் என்றும்" "அவனன்றி அணுவும் அசையாது" என்பதை முழுமையாக உணர்ந்தவன், நீ ஒருவனே! நீ உணர்ந்ததை ஸ்வய அனுபவமாக உணர்த்தி போதிப்பவனும் நீ ஒருவனே! "யாம் ஓர் உண்மையை சொல்கிறேம் :- "இது உனக்கு அல்ல", "மெய் அன்பர்களுக்காகும்"! எம் ஆலயத்துள் தங்கியிருந்த சிவமெய்யன்பர்களை "அதிகாரத்தாலும்" "அஹங்காரத்தாலும்" கலிதோஷத்தால் உந்தப்பட்டு, சில தகாத வாசகங்கள், சொல்லி வெளியே விரட்டினார்கள். "ஆலய அதிகாரிகளும்", (அடியார்களைப் போல் உள்ள, சில "அடியார்களும்!!!!! வெளியேற்றப்பட்ட அந்த மஹான்களின் "தபாக்கினியானது" மண்டபம் தீ பற்றி எரிந்தது! இதைவைத்தாவது அவர்கள் உணர்வார்கள், என எதிர்பார்த்தோம். கலிதோஷ மஹிமையால், எவரும் உணரவில்லை! காரணம் மேலே சொன்ன,



உ

"எட்டு வக்ர குணங்களுமே"! அன்பர்களுக்கு இல்லாத இடம் நமக்கும் தேவை இல்லை யென முடிவு பண்ணி - - - - - - - -

"அன்று ஆலயம் விட்டு வெளியேறினோம்!!! } இருக்க முடியவில்லை! இருப்பு கொள்ளவில்லை!

"எம் ஜடாபாரத்தின் ஓர்" "ஜடாமுடி"! இழந்து, "கொடிமரம்"! "சாய்ந்தது"!!!!!

"இறைவன் இருக்கும் ஆலயத்தில், கொடிமரமும், பலிபீடமுமே முக்கிய இடம் பெறும்"!

கொடிமரம் :- "ஸத்திய வாக்கையும், தர்மத்தையும்" யாம் காத்து, உங்களை ரட்சிக்கிறோம், என்பதன் அடையாளம் "கொடிமரமாகும்"!

பலிபீடம் :- உங்கள் அறியாமையினை சேகரித்த, ஆணவம், கன்மம், மாயை, ஆகிய இந்த "மும்மலங்களையும்"! இப்பலிபீடத்தின் முன்பு நமஸ்கரித்து, "பலி"! கொடுங்கள் என்பதை, உணர்த்துவது "பலிபீடமாகும்"!

வருமானமாகிய

ஆகவே இக் கொடிமரமே சாய்ந்தால், யாம் எப்படி அங்கு இருப்போம், என எவரும் உணரவில்லை. ஆனால் இவர்களுக்கு "வியாபாரம் தேவை"! ஆகவே எம் சொரூபத்தை வைத்துக் கொண்டு, "வியாபாரம் செய்கிறார்கள்". எம் "கிரி"! வலத்தை சுட்டிக்காட்டி "விளம்பரம்"! செய்கிறார்கள்!



உ

வியாபாரமும், விளம்பரமும், உள்ள இடத்தில், யாம் எப்படி இருக்க முடியும்? எப்படி இருக்கக் கூடும்?? ஆனால் இந்த அறியாமையின் மாந்தருக்கு இது புரியவில்லை! காரணம் மேலே சொன்ன எட்டு "கோர குணங்களுமே"! ஆகும்! இதில் ஒன்றிரண்டை விட முயற்சித்தாலும் அந்த எட்டும் ஒழிந்து போகும்! இந்த எட்டு கொடூரகுணங்களுமே, அடியார்களை அடியாட்களாக மாற்றி விட்டதென, பிரமாணமாகச் சொல்லுவோம்!

பரமன்:- ஹே தாஸ அடிகளே! நீ எழுதிக் கொடுத்த பக்க மடலை படித்துப் பார்த்தோம். உண்மையை அப்படியே எழுதியிருக்கிறாய்! நீ எழுதியபடி எங்கும், எதிலும், அனைவர்வாக்கிலும், "திருவண்ணாமலை" என்ற வாசகம் மாறி, "திரு அண்ணாமலை" என்ற வாசகம், வரும் என எண்ணுகிறாயா?

வைத்தியம்:- ஏனைய பிரபோ! அப்படி எழுதிக் கொடுக்கப் பணித்தாய். இக்கருவி எழுதிக் கொடுத்தது. முடியும், முடியாது என்பது உனக்குத்தான் தெரியும்?

பரமன்:- அது என்ன அப்படிச் சொல்லிவிட்டாய்? நீ எமக்கும் அதீதமானவன் தானே? உனக்குத் தெரியாமல், எமக்கும் மட்டும் எப்படி தெரியும்?

வைத்தியம்:- பிரபோ! ஓர் விஷயம் பேசப்படுகிறது. அதாவது, அப்பெயர் **தமிழ் இலக்கணம்!** முறைப்படி வைத்ததாம். "பண்டிதர்கள்" வைத்த பெயரை, "பாமரர்களால்" மாற்ற முடியுமா, என்று தான் சந்தேகம்! (இப்படி நாங்கள் இருவரும் சம்பாசனை செய்து கொண்டிருக்கும் போது ஓர் கம்பீரமான குரல் ஒலித்தது)



# ஹே சுக சொரூப தாரி பாபா! பரமனே!!!

நீவிர் இருவரும் ஸித்தேஸ்வர மலைக்கு அந்த குகையின் அருகே உள்ள "**வட்ட பாறைக்கு**" வரவும்!

வைத்தியம்:- எம் பெருமானே! அழைப்பது யார்? யாம் வழக்கமாக செல்லும், வட்டப்பாறைக்கு வரச்சொல்வதாக தெரிகிறதே! காரணம் என்ன?

பரமன்:- ஹே பாபா! அழைப்பது நம் திரு அண்ணாமலையாராகிய "**தட்சிணா மூர்த்தி**"!!! ஆகும். செல்லுவோம் வா என, இந்த வைத்தியத்தையும் அழைத்துக்கொண்டு அங்கு சென்றார். இனி திரு அண்ணாமலையாரை "**ஸத்குரு**" என்றே அழைப்போம்!

ஸித்தேஸ்வர மலையில் முன்பு அடிக்கடி போகும் ஓர் குகை உண்டு. அதில் சூட்சும வடிவில் "இரு சித்தர்கள்" இருந்தார்கள். அவர்களுடன் ஓர் ஒன்றரை ஆண்டு காலம், தொடர்பு வைத்திருந்தோம். "ஜீவ வாசனையின் குண தோஷங்களால்" அவர்கள் அங்கு இருக்க முடியாமல், சில காலங்களுக்கு முன்பு, எம்மிடம் சொல்லி விட்டு, "ஹிமாலயா" சென்று விட்டார்கள். அதன் பிறகு, யாம் வாக்கிங் அந்த பக்கம் செல்லும் போது, அப்பாறையில் சற்று அமர்வதுண்டு. அதை எம் அன்பர்கள் எவருக்கும் இதுவரை காண்பித்ததில்லை, இன்று திடீர் என அழைப்பு வந்ததும், எம் பரமன் கருணையால், அவருடன் அக்குகை வாயில் உள்ள வட்ட பாறைக்கு சென்றோம்! அங்கு அப்பாறையில் "தட்சிணா முகமாக" அமர்ந்திருப்பவரை,



உ

பரமகுரு என்றும், லோககுரு என்றும், "பரசொரூப குரு" என்றும், போற்றும் எம், "ஸத்குரு" ஆகிய, "நட்சஜ மூர்த்தி"!!

அவர்களை, எம் பரமனும் யாமுமாக தரிசித்து, நமஸ்காரம் செய்து, ஆசியும் பெற்றோம்!

ஸத்குரு:— எம் அன்பர்களின் திருவடியே! நலமாகவே இருக்கிறாய்! எம் பரம புருஷனே! நீயும் நலமே! ஆனாலும் உங்கள் இருவரிடையே, "குண தோஷ நிவர்த்தி" பற்றி தோ சம்பாஷணை நடந்து கொண்டிருந்ததே! "அது எம் பாபாவுக்கு தேவையில்லைதான்!" "லோக ரட்சகனை"! உமக்கு அது தேவைதான். ஆனாலும் நீர் அதை கண்டு கொள்வதும் இல்லை. கண்டிப்பதும் இல்லை. அது உமக்கு தேவையும் இல்லைதான்!

பரமன்:— உண்மைதான் தேவா! ஆனாலும் எம் நிலை ஜீவ ரட்சிப்பாக இருப்பதால், அதை "கருணை" நிலையில் "சாட்சி" பாவனையில் அமைவதால், எந்த டாரையும் எமக்குத் தோற்றுவதில்லை!

வைத்தியம்:— ஹே பரம் பொருளே! ஸத்குருதேவா! ஸத்ய சொரூபா! திரு அண்ணாமலையில் தாங்கள் வீற்றிருக்கும் நிலையோ, "ஞான மாமலை"!!! அப்படியென்றால், அது "ஞானகிரியன்"! எனப் பொருள்படும். அங்கும் லோகாயுத விஷயம்



"விஷமாகியே" அஞ்ஞான இருள் பரவ இடம் உண்டா தேவா? இது கலியுகம் என்பதையும், ஒப்புக் கொள்கிறோம். "ஆத்மஞானம்" ஒன்றுக்கு மட்டும் "தனித் தன்மை" உண்டே! அதுவும் சற்று மறைபட்டதாக தோற்றுகிறதே? இதன் காரணம் எதுவும் உண்டா? கலி என்றால் அத்தனை கடுமையா?

ஸத்குரு:- (சிரித்துக் கொண்டே) குழந்தாய் சுகா! "கலி" என்ற ஓர் சொல்லுக்கு, நம் மஹான்கள் கொடுக்கும் விளக்கம்:- கலி என்றால் கலிப்பவன். அதாவது தன்னை ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், லக்ஷம், கோடி, பற்பல கோடியென தம்மை, "விருத்தி" செய்பவன், எனப் பொருள் கொள்ள வேண்டும்! மேலும், கலி என்றால் "கலப்பவன்" அதாவது ஒரு குடம் பாலில், ஒரு துளி விஷம் கலப்பது போன்று, அனைத்திலும் தாம் கலந்து கொண்டு, அனைத்தையும், "விஷகுணதோஷ" மயமாக்குபவன். என்றும், பொருள் கொள்ள வேண்டும்!

மேலும் நீ உன் கலியுக தர்மத்தில் கூறியபடி இக்கலியானது, "இருளுக்கே உரியகாலம்"! சூரியன் உண்டு, (இறைவன் உண்டு) ஆனால் பிரகாசிக்கக் கூடாது! ஆகவே இக்கலியுகத்தில், "ஜீவ சம்ரட்சணம்" செய்யும் இறைவனுக்கும், "ஜீவ உத்தாரணம்" செய்யும் ஞானிக்கும், "கலிதோஷத் தோற்றமே" இருந்தால், இறைவனின் "சாட்சி" பாவனையும், ஓர் ஞானியின் "அகண்ட" (சர்வசாட்சி) பாவனையும், அவர்களை இவ்வுலகுக்குக் காட்டாமல் தம்மை



"மறைக்க" முடியும் இறைவனால்!
"சாமான்யனை" இருக்க முடியும் ஞானியால்!

பைத்தியம் :- இதை உதாரணத்தால் விளக்க முடியுமா குருதேவா?

ஸத்குரு :- குழந்தாய்! எம் அருமை பாபாவே! முடியும். அதாவது இறைவன் "கற்பனை" சொரூபம்! ஆனால் ஞானி பஞ்சீகரணம் செய்யப்பட்ட "தூல" சொரூபம்! இறைவன் சூட்சுமமாக இருப்பதால் அவன் சாட்சி பாவனையில் இருப்பது கடினமான காரியம் அல்ல! ஆனால் ஞானி ஜக ஜீவர்கள் தூல (மனித) கண்களுக்கு தோன்றும் நிலையில் இருந்து கொண்டு "சர்வ சாட்சி" பாவனையில் இருப்பது மகா, மகா, மகா கடினமே! ஆனால் "உம்மை புகழ்கிறேன் என எண்ணி விடாதே! இது புகழ் துதியான வாசகம் அல்ல! இல்லை! இல்லை! இல்லை! இல்லை! அந்த காலாதீத "பரத்திலிருந்து நேராக" வந்த "ஒருவனுக்கே!!!!"

இது சாத்தியமாகும். மற்றும் எவரும், "இறை கருணை பரிபூரணமாக பெற்றாலும்" "உம்" "நிலை பெற முடியாது. இது பிரமாண உண்மையாகும்." மற்றும் ஞானியர் அனைவரும் இறைவன் அனுமதியோடும், இறை கருணையோடும், இப்படி நடக்க வேண்டும் என்ற திட்டத்தோடும் வந்தவர்கள் ஆகும். ஆனால் நீயோ, இங்கு நீயாக ஓர் தோற்றம் எடுத்துக் கொண்டு உன் திட்டப்படி



2

"நீயே வகுத்துக்"! கொண்டவன்!
"உலகின் ஸத்குரு" (......)
"ஒருவனே"! காரணம்;

"கண்டிப்பும், தண்டிப்பும், வேகதாப கோபமற்று ஸ்வய ஞான உணர்வை, தாங்கும் குழந்தைக்கு அதன் தாய் அது அறியாமல் "ஞான அமுதை"! உள்ளே செலுத்தி, அதை உள்ளேயே கலக்கச் செய்து பிறப்பிறப்பை ஒழிக்கும் ஓர் "உதவ அக்கரை"! (உதவாக்கரை) யான வைத்தியம் நீ ஒருவனே!

"ஆனால் உன் குழந்தைகளுக்கு ஒன்று மட்டும் வேண்டும்"!!!

அதாவது???

1. ஸத்குரு கிருபை கிடைத்து விட்டது! "நாம்"! கடைத்தேற்றப்பட்டு விட்டோம்! என்ற பரிபூரண "நம்பிக்கை"! ஒன்றே மிக! மிக! மிக! மிக! மிக! மிக! மிக! மிக! மிக! மிக! மிக! "உறுதியாக வேண்டும்".

2. எந்த குண தோஷங்களும் பற்றப்படாமல் "உரிமை இல்லாமல் விளையாடி"! "எல்லாம் நீயே"!!! என்ற சர்வார்ப்பண நிலையிலும் மிக! மிக! மிக! மிக! மிக! மிக! மிக! மிக! மிக! மிக! மிக! "உறுதியாக வேண்டும்".



உ

ஸத்குரு:- அன்புக்குழந்தாய்! "ஜகத்"
சொரூபமே! பர சொரூப "பாபாவே!"
மேலே கூறிய அனைத்தும் ஸத்திய வாசகமே!
இவ்வாசகங்கள்?

1. "ஜீவ" நிலையில் உள்ள மஹான்கள் எவர்
சொன்னாலும், "அது நற்பெருமையாகும்! அது குணதோஷங்
களில் ஆட்படுத்தி "கர்மாவையும் கொடுக்கும்"! அது அப
சாரமாகவும், அனுச்சாரமாகவும், அபவாதமாகவும் முடியும்.
அது "பிறப்பு பிறப்பையும்" உண்டு பண்ணும்!

2. "தெய்வ" நிலையிலுள்ள மஹான்களாக இருந்தால்
பொருள் கொண்டு,
நிலை கண்டு, இடம் கண்டு "உபசாரமாக
"அபசாரமாகவும்", "உபசாரமாக
வும்", "உபகாரமாகவும்" மாறும்!
அவைகளும் அவஸ்தைகள் இல்லை!
மறையும்!

3. "பர" நிலையில் உள்ளவர்களுக்கு, எந்த தோஷமும்
பற்றாமல், அது ஸத்தியமாய் பிரகாசிக்கும்!

4. "உம் போன்று நாம்தாம்"!
ஆன அதன் சொரூபமாகவே இருப்பவர்களுக்கு, நாம
ரூப, குணம், குறி, கால, தேச, வர்த்தமானம் கடந்து எந்த
"தோஷமும்" இல்லாமல் ஸத்தியவாக்காக
பிரகாசிப்பதுடன், சகஜ நித்திய ஆகிய பிரம்மானந்தம்
நிறைவுற்று விளங்கும்! "இக்கருத்தை மாசு மறு இல்லா
மல் ஏற்பவர்களும், நலமும், சுகமும் பெறுவர்.
இது ஸத்தியம்!



உ

மேலும் தேவ தெய்வங்கள், அவதாரம்
எடுத்து வந்தாலோ! தேவ தெய்வங்களின்
அனுமதி பெற்று, ஸ்ரீமஹான்களாக அவதா
ரம் எடுத்து வந்தாலோ! அவர்களுக்கு
"யோகமாயா" என்ற விஷ்ணுமாயை
அவர்களுக்கு ரட்சையாக இருந்து" செயல்படுவதால்,
அவைகளில் அந்நிலை சிறப்பு மிகு!

ஆனால்???

பஞ்சீகர்தம் பண்ணப்பட்ட ஜீவ வடிவில், கர்ப்பத்தில்,
ஜனிப்பதைப்போல் ஓர் தோற்றத்தை காட்டி, ஜகஜீவ
ர்களைப் போல் நடை, உடை, பாவனைகளால் "வாழ்ந்
து காட்டி, யோகமாயா என்ற விஷ்ணுமாயையை தாம்
தீண்டாமலும், அதற்கு ஆட்படாமலும், தம் யதார்த்
த அம்ஸ சொருபமான, "யோகமாயா"
வை மட்டும் தமக்குள்ளாக அடக்கி வைத்துக் கொண்டு
எக்காரணம் கொண்டும், "எதையும்" வெளிப்படுத்தா
மல்", லோகாயுதக் கொள்கையான, "அஹங்கார, அதிகார,
அபிமானமான, "நான்! என்னால்! என்
னுடையது!" என்ற மூன்றையும் "முழுமையாக
கெடுத்து, முறைப்படி வரிசைக்கிரமமாக, அனைத்து "தோ
ஷங்களையும்" கெடுத்த, எந்த விதமி
யும், சாந்தி, அமைதி, திருப்தியுடன் இருந்து கொண்டு,
"ஆனந்த"ப்படி விளையாய், "லீலையே"!
பல நிலைகளிலும் காட்டி காட்டி, அன்பர்களை நிலை கூட்டி



உ

வைக்கும், இப்படிப்பட்ட மஹாத்தான சாதனையை, வேறு எவரும் செய்யவியலாது! செய்யமுடியாது! காரணம்?????

"**காலாதீத அந்த ஒன்றே**"! இப்படி செய்யக்கூடும்! செய்யமுடியும்! இது பிரமாண உண்மையாகும். இந்தவிதமாக எம் ஸ்ரீ ஸத்குருதேவர், பொன் மொழிகளை உதிர்த்த வண்ணம், ஆனந்த பரவசராயிருக்க, எம் பெருமானும், அந்த வைத்தியனும், அவர் திருவடியின் கீழ் அமர்ந்த வண்ணம், அவர் திருவடி இரண்டையும் தங்களுடைய இரு தொடைகளில் தாங்கிய வண்ணம், "**கண்ணீரால்**" பாத சுத்தியும், கரங்களால் "**பாத சேவையும்**" செய்து, அந்த ஒன்றுடன் கலந்திருந்தவர்கள் போலும்! அருள் கருணையால், சேதனசக்தி உண்டாகி, அம்இருவரும் தம் தம் நிலைக்கு வந்தனர்.

பரமன்:— ஹே பாபா! என்ற மஹாத்மா! ஒரு விஷயம், உம்மிடம் கேட்க வேண்டும். அதாவது இந்த ஸ்ரீமத் ரிபு கீதையை, மூன் மூன்று யுகங்களிலும், இக்கலியுகத்தில் எங்கெங்கோ பல இடங்களிலும், திருஅண்ணாமலையில் சமீபத்தில் வாழ்ந்த ஸ்ரீ ரமணர் என்ற மஹாத்மா விடமும், பாடக் கேட்டதுண்டு! "**அவர்கள் பாடும் நிலை வேறு**! "**நீ பாடும் நிலை வேறு**"! இதில் ஏதேனும் மாற்றம் உண்டா?

வைத்தியம்:— தேவாதிதேவா! அவஸ்யம் உண்டு! அன்றும் இன்றும் அனைவரும் பாடும் ரிபுகீதையானது, அதை "**அப்படியே கேட்டு**" நிலையில் அமைந்ததாகும். அதாவது 44 அத்யாயங்களிலும் ஒரு



உ

"வரிவிடாமல்" கோர்வையாக, பாடி வந்தார்கள். முந்தைய யுகங்களில் 'ஸ்லோகங்களாகவும்' இக்கலியுகத்தில் தமிழ் வடிவில், வரிசைக் கிரமமாகவும் பாடி வந்தார்கள். யாமும் ஆரம்பத்தில் அவ்வாறு தான் பாடுவோம். ஆனால் இப்போது அதை சற்று மாற்றி அமைத்துக் கொண்டோம்.

பரமன்:— அதன் காரணம் கேட்கவும் உண்டா?

வைத்தியம்:— உண்டு தேவா! இட்டதட்ட இரண்டாயிரம் பாடல்களையும், பொறுக்கியெடுத்து குறிப்பிட்ட பாடல்களாக, 'ரஸாம்ஸமாக' அமைந்ததே, உபதேச பாடல், 108 ஆகவும், சிஷ்யனின் அனுபவ பாடல், 32 ஆகவும், ஆக மொத்தம் 140 பாடல்களுடன் முடித்துக் கொண்டோம்.

ஸத்குரு:— எம் பெருமானே! ஈசனே! இப்போது இக்குழந்தை பாபா! அவர்களுடைய அன்பர்களுடன் பாடுவதைக் கேட்கும் போது, 'பொருள்' (கருத்து) மட்டும் அப்படியே செல்கிறது. அந்த விறுவிறுப்பே, அதிகரித்தும் கூடி விடுகிறது!

பரமன்:— தேவாதி தேவா! ஆதி தேவா! உண்மை தான், நாம் அனைவரும் உணர்ந்து அனுபவிக்கும் நிலைக்கும், அவருடைய அன்பர்கள் அனைவருக்குள்ளும், அவர்கள் 'அறியாமலேயே' உள்ளே சென்று "மூவாசை, மும்மலம், முக்குணம், மூவினை" ஆகிய இந்த 12 ஐயும் அணு அணுவாக சிதைத்து அழிப்பதையும், "'நாம் அனைவரும் அறிவோம்'"

"ஆணவ மாயா மலம் வசப்பட்டு, அந்த மயக்க போதையில் இருக்கும் பாபாவின் மெய் அன்பர்கள்,



# "அனுபூதம்" என்னை "அறியார்"

ஸத்குரு:— இந்த ஆத்மஞானமானது, மனம், புத்தி, சித்தம் அறியாது, உள்ளே சென்று அவைகளை அழிப்பதுதானே, அதன் சிறப்பு!

பாமரன்:— தூங்கும் குழந்தைக்கு அமுது ஊட்டுவதைப் போல், நம்பாபா ஊட்டுவதால், அவர்கள் "அனைவருமே, பரிசுத்தமும் பெறுவர்" என்பது பிரம்மாணை உண்மையாகும்!"

ஸத்குரு:— ஹேபாபா! முன்பு ஸ்ரீபகவான் ரமணர் காலத்தில், கேட்ட ரிபுகீதைக்கும், இப்போது நீ பாடும் ரிபுகீதைக்கும் வித்தியாசம் காண்கிறேன். அது அவர் காலத்தில் பொருந்தும்! அப்போது "கலி" வேகம் அதிகம் இல்லை!

ஆனால் இப்போது கலியின் "வேகமும்" "மோஹமும்" (ஆக்ரமிப்பும்) அதிகமாகக் காணப்படுவதால், உன்னுடைய "ஸாம்ய வாசகமே" அதிக சக்திவாய்ந்ததாகும்!

பைத்தியம்:— ஹே ஸத்குருதேவா! ஸத்திய சொரூபா! அனைத்தும் தாங்கள் கருணையே! தாங்களும் எமது ஐயன் (குருடன்) கண்ணனும் இணைந்து நடத்தும் ஞானப்பாடமாகும்!

பெருமான்:— ஆமாம் தாஸியாபா! உன் பாடல்களை ரிபுகீதை என நாமம் சூட்டாமல், "ஸ்வயஞான அனுபவம்" என நாமகரணம் சூட்ட ஏதேனும் காரணம் உண்டா?

பைத்தியம்:— எம்பெருமானே! இது தாங்கள் அறியாததா? 44 அத்யாயங்களையும், அப்படியே தமிழிலோ, அல்லது சமஸ்கிருத ஸ்லோகமாகவோ பாடினால் அது ரிபுகீதை ஆகும். அதை இப்படி "ஸ்வாம்ஸ பாணியில்" உணர்வு பூர்வமாகப் பாடும் போது, அது ஸ்வய ஞானானுபவம்" ஆகும்.



உ

சத்குரு:– ஓ எம் தாஸ் பாபாவே!
இதன் தொகுப்பு ஸ்ரீ சத்குருவும்;
உமதய்யனை கண்ணனும் இணைந்து
செய்ததால் இதன் மகிமையை எவரா
லும் எடுத்துரைக்க முடியாதுதான்.
"இதில் உன் கணிப்பு என்ன???"

இதென்ன கேள்வி? இதன்
வைத்தியம்:– ஹே சத்குருதேவா! இதுஎன்ன கேள்வி உனதாக இருக்க இக் கருவாளைய
வடிவமும், கருத்தும், உனதாக
கேட்டதென்ன பயன்?
சத்குரு:– குழந்தாய் பாபா! என்னதான் நீ உன்னை கருவி
என்றும், பொம்மையென்றும், எழுதுகோல் என்றும்,
கூறினாலும், "உன் மெய்யன்பர்களை ஏமாற்றவும்,"
உன் உண்மை "சொரூபத்தை" மறைக்
கவும், பயன்படுத்த நீ பயன்படுத்தும் தந்திரமாகும்.
அது எம்மிடமும், எம் இறைவனிடமும்" பலிக்குமா?
வைத்தியம்:– ஹே கருணைக்கடலே! தயாநிதி! தாங்கள்
எம் தாயும் (கண்ணனும்) போல் பேசக்கற்றுக் கொண்டீர்
களா? ஓர் உண்மை என்னவென்றால் எம் மெய்யன்பர்களை
ஏமாற்றவில்லை "மாற்றி" அமைக்கிறோம்!
பரமன்:– ஹே பாபா! மாற்றி அமைக்கிறாயா? அது அவருக்கு
வேண்டுமானால் புரியும்! எமக்கும் புரியவில்லையே!
சற்று விளக்கமாகச் சொல்?
வைத்தியம்:– ஹே பரமாத்மனே! பரமபுருஷனே! அப்படியென்றால்
புரியாத புதிர் அல்ல! அதாவது?
"எதுவும்" பெற ஒட்டாமல் தடுத்து அதாவது
"குரு" ஸ்தானம் கொடாமல் தடுத்து "அது"!
ஆகும் நிலைக்கு அனுபவம் கொடுத்து மாற்றி வருகிறோம்!



உ

பரமன் :- ஹே தாஸி பாபா! இன்றைய
கலியுகத்தில் அனைத்து ஜீவர்களும்,
பாமரன் ஆனாலும், பக்தன் ஆனாலும்,
சாதனையாளன் ஆனாலும், சந்நியாசி
ஆனாலும், எந்த மடாதிபதியோ, பீடாதி
பதியோ அனைவரும், வியாபாரமும்
விளம்பரமும் உடையவர்களாய்
"சேவை" என்ற ஓர் "லேபிள்"
வைத்துக்கொண்டு "பிரவர்த்தி மார்க்கத்தைத்தான்"
காட்டு இருக்கிறார்களே தவிர, நிவர்த்தி மார்க்கத்தை ஏன் காட்ட
வில்லை? அது அவர்களுக்கு தெரியவில்லையா? அல்லது
கலிதோஷமே இப்படித்தானா?

வைத்தியம் :- ஹே தேவாதிதேவா! நிவர்த்தி அனைவர்க்குமே
தெரியும்தான் ஆனால் பிரவர்த்தியில்தானே,
"பணம், பேர், புகழ், பட்டம், பதவி, கௌரவம்"
என "மோகாவேசம்" உண்டா
இருதும் இது கலிதோஷ மகிமைதான்.
உலக அருணாசலேஸ்வரா! இந்த ஊர்
எம்பெருமானே! தாங்கள் இந்த வைத்தியத்தை
வம்பு இனி நமக்கு வேண்டாம். தாங்கள் குறிப்பாக
தேடி வந்ததற்கு பிரயோஜனமாக,
"திரு அண்ணாமலை" அன்பர்களுக்காக
அவர்கள் குழப்பம் தீர, அமுத மொழியாக, அவர்கள் கடைத்
தேறும் நிலைக்கு, சில உண்மையை உரைக்க வேண்டும். அவர்கள்
கேள்வி யெல்லாம், எம்பெருமான் ஆலயம் விட்டு திருக்கை
லாயம் சென்றதால், ஸ்ரீ மஹான்களும் சென்றுவிட்டார்
களா? இனி அவர்களையும், நம் இறைவனையும் தரிசிக்க
முடியாதா? அந்த நன்னாள் என்று வரும் என ஏங்கிக்
கொண்டிருப்பவர்களுக்கு தாங்கள் கூறும் பதில் என்ன??
ஸ்ரீ அருணாசலேஸ்வரர் என்ற,



உ

# "ஸ்ரீபகவான் வாக்கியம்"

அன்பான எம் அறிவுக் குழந்தைகளே!

"ஸத்யமேவ ஜயதே"!!!!!

என்ற வேத வாக்குப்படி ஸத்தியம் என்றும் அழிவதில்லை. ஸத்தியமும், தர்மமும், அழிந்தால் உலகமோ, ஜீவனோ ஈஸ்வராதிகளோ, அவசியம் இருக்க முடியாது. ஆனால் இது கலியுகமாக இருப்பதால் இக்கலியில் "சூரியன்" (இறைவன்) பிரகாசிக்கக் கூடாது. இது இருளுக்கே உரிய காலம்! ஆனாலும் அந்த சூரியன் எங்கும் வெளியில் பிரகாசிக்க மாட்டான்! ஒவ்வொருவர், "அகஉணர்வில்" தான் அவன் இருக்க வேண்டும்! இருக்கிறான்! இனி அவனை வெளியில் தேட வேண்டாம். நம் அனுபவ ஞானிகள் கூறுவதை சற்று சிரத்தையுடன் நோக்குங்கள். அதாவது?

1. வெளியே எங்கேயோ இறைவன் இருக்கிறான் எனத் தேடி, ஓடி, அலைவது, "அஞ்ஞானம்"!!

2. இறைவன் நம் முன்னே இருக்கிறான் என உணர்ந்து, நாமாவளி, பஜன், நாம சங்கீர்த்தனம், நாமஜபம், இப்படி "உருகி, அழுது" நம் கண்ணீரை அவனுக்கு காணிக்கையாக்கி ஆனந்தபரவசத்தில் திளைத்திருப்பது, "பக்தி" ஆகும்!

3. அப்படி உள்ள நெகிழ்ந்த நிலை பரவசம் அடைந்து அந்த ஆனந்த பரவசத்தினால் உள் கட(ந்து) உள் கட(ந்து) உள் கட(ந்து) உள்ளே சென்று



உ

"நாமே "கடவுள்"! ஆகி
"அவனே நாமாய், நாமே அவனாய் ஆகி
"பிரம்மானந்தநிலை"
பெறுவது (ஆத்மஞானம் ஆகும்) இதுவே,
"பிரம்மஞானம்"! ஆகும். இதன் சாதனை சுருக்கமாக

1. நான், எனது, என்னுடையது என்ற அஹங்கார, அதிகார அபிமானங்களை முழுமையாக விட்டு, எல்லாம் நீயே என்றும், எல்லாம் உனது என்றும், எல்லாம் உன்னுடையதே என்றும், "முழுநிலை பெற வேண்டும்!
2. குற்றம் குறை காண்பதும், விருப்பு வெறுப்பை ஏற்பதும், பேதமாக தோன்றுவதும் அவசியம் மாறி, எங்கும், எதிலும், எந்நிலையிலும், எக்காலத்தும் இருப்பதில், இழப்பதில், வருவதில், போவதில், எந்த குண தோஷமும் இல்லாமல், "போதும்"! என்ற "நிறை"! நிலை பெற வேண்டும்!
3. அனைத்தும் இறைவன் பொருள் என்றும், அனைத்தும் இறைவன் இயக்கம் என்றும், அனைத்தும் பாரபட்ச தோஷமின்றி ஒழுங்காக நடைபெறுகிறதென்ற, பேருணர்வு உண்டாகி, எல்லாம் "நலமே"! எல்லாம் "சுகமே"! என்ற நிலையில் "தன்னுள் தான் அடங்க வேண்டும்"!
4. உலகமோ, அதன் பொருள்களோ, உறவோ, சுற்றமோ இறைவன் உனக்கு தந்த விளையாட்டு பொருள்கள் என்று "விளையாடு"! ஆனால் "உரிமை" கொண்டாடாதே
கொடுத்தால் எடு, எடுத்தால் விடு.
காரண காரியம் கேட்காதே!



உ

5. நீ இறைவன் செல்லக் குழந்தை!
அப்படியானால் நீ இறைவன் அம்சம்.
நம் இறைவனும் காலாதீத பர சொரூபமும்
ஒன்றே! அப்படியானால் அந்த பர சொரூபமும்,
நம் இறைவனும், நாமும், ஒன்றே என்ற
**“பிரம்மானந்த கடலில்”** நீ மூழ்கிவிடு!

“இங்கு நீ படித்த கேட்ட, உணர்ந்த அந்த ஸ்ரீமகான்கள் வேறு நீ வேறல்ல என்ற, நிறைநிலை பெறமுடியும்! அவர்கள் எந்த விதியும் உன்னை பிரிந்ததில்லை! நீயும் அவர்களை விட்டு பிரியவில்லை என்ற **“ஓர்நிலை”** பெறமுடியும்!

இந்நிலை பெற உங்கள் அனைவரையும் ஆசி கூறி வாழ்த்துகிறேன் என முடித்தார்! **“அருணை சர்வேஸ்வரர்”**

---

வைத்தியம் :— ஹே ஸத்குரு தேவா! ஸத்குரு வாரியா! ஸாந்த சொரூபா! ஸத்ய சொரூபா! ஜோதியா நிதி! கருணைக்கடலே! தட்சிணாமூர்த்தி சொரூபமான, **“அன்னை அம்மையாரே!!!”**

நாங்கள் நம் அன்பில் விளைந்து அறிவில் வளர்ந்து கொண்டிருக்கும், குழந்தைகளுக்கு என்ன அறிவுரை வழங்கப் போகிறீர்கள். உங்கள் வாக்கை வெகு ஆவலுடன் எதிர்பார்த்து இருக்கும் மழலைகளுக்கு, ஆசியுரை வழங்குங்கள் என பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்!



உ ஸ்ரீஅண்ணாமலையாரே

"சத்குரு வாக்கியம்"!

எம் அன்பு மயமான ஞானச் செல்வங்களே!

"ஸங்கல்பமே உலகம்"!

"ஸங்கல்ப ரஹிதமே மோட்சம்"!

அதாவது உங்கள் வாக்கே உலகமாகவும், பொருள்களாகவும், அனைத்து ஜீவகோடிகளாகவும், இவை அனைத்தின் கர்த்தாக்களான "ஈஸ்வரர்"(திரிகர்த்தா)களாகவும்" தோற்றுவதால், "உங்கள் வாக்கை" "காக்கவும்" வைக்கப்பழகுங்கள்!

1. இறை உணர்வோடும், பர உணர்வோடும்
2. குறைவாகப் பேசுங்கள்!
3. குற்றம் குறை நீக்கிப் பேசுங்கள்!
4. பிறர் மனம் புண்படாமல் பேசுங்கள்!
5. கொடுத்த வாக்கை காப்பாற்றுங்கள்!
6. சொந்தபந்த பாச வார்த்தை குறையுங்கள்!
7. ஆத்திரம், அவசரம், வேகம், ஆவேசம் கொண்ட வார்த்தை நிறுத்துங்கள்!
8. கடும் சுடும் கபட வாக்கு வந்தால் நீயே கலி புருஷன்!
9. அமிர்தமாக இதமாக மிதமாக வாக்கு வந்தால் நீயே கல்கி ஆவாய்!
10. மௌனம் என்பது வாய் பேசாமல் இருப்பதல்ல! வார்த்தை குறைப்பதாகும். வாக்கு குறைந்து குறைந்து குறைந்து வந்தால் அவ்வாக்கு "தாமே நின்றுவிடும்"! அதுவே "மௌனம்" ஆகும்!



உ

உன் வாக்கு குறையும் போது, செயலும்
தானே குறைந்து குறைந்து நின்று போகும்!

ஆகவே "வாக்கை" நிறுத்தாதே! குறைத்து பழகு!

ஆத்மஞான சாதனைக்கு மூன்று காரியம் தான்,
ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள்!

1. குற்றம் குறை காணாதிருப்பது! பேதபார்வை, பேதஉணர்வு
இல்லாதிருப்பது! விருப்பு வெறுப்பு கொள்ளாதிருப்பது!

2. நான், என்னால், என்னுடையது அவசியம் மாறி மறைய
வேண்டும்! அதற்கு மாறாக, எல்லாம் நீயே, எல்லாம்
உன்னால், எல்லாம் உன்னுடையதே என ஆகவேண்டும்!

3. எல்லாம் அவன் பொருள்! எல்லாம் அவன் இயக்கம்! உன் விருப்
படி உனக்குத் தந்தவைகளை வைத்து "விளையாடு" உரிமை கொண்
டாடாதே

மேலே கூறிய இம் மூன்றையும், சிரத்தையுடன் ஏற்றுக் கொண்டால்
மற்றும் "ஸ்வய அனுபவ" நீங்கள் தானே
ஒன்றன் பின் ஒன்றாக வந்து உன்னை ஆட்படுத்திக் கொள்ளும்!
எம் ஞானக்குழந்தைகளே!

1. "ஸ்வய ஞானானுபவம் ஒன்றை தவிர" அனைத்து பாடம்,
படிப்பு, வழிமுறைகளை அடியோடு நிறுத்தி விடுங்கள்!

2. அகம் பிரம்மம்; பிரம்மம் அகம்; அகமே எல்லாம்;
ஜகத்தோ ஜீவனோ, ஈசனோ நாமரூப குணத்தோடு
இல்லவே இல்லையென்பது பிரமாணமாக உறுதியெடுங்கள்!

3. "அனைத்தும் பிரம்மம்!" "அன்றி
அன்னியமில்லை என உறுதிகொள்ளுங்கள்!"



உ

4. உங்கள் சாதனைக்கும், **"துறவின் தர்மத்திற்கும்"!** இக்கலியுகத்தில் பெரும் தடையாக இருப்பது,

**"வியாபாரம்", "விளம்பரம்", "பட்டம்", "பதவி", "புகழ்", "காமம்", "அதிகாரம்", "அஹங்காரம்",**

ஆகிய எட்டு குணங்களுமே, என உறுதி கொள்ளுங்கள்! இக் கலி கலிபுருஷனின் ஸத்தியவாசகமாவது:- இக் கலியுகமாகிய எம் ஆட்சியில், மடாதிபதியோ, பீடாதிபதியோ, ஆஸ்ரமவாஸிகளோ, சந்நியாசிகளோ! மற்றும் எந்த துறவி ஆனாலும் சரி **"பொன்"** (பணம்) **"பெண்"** (காமம்) வசப்படாமல், எவனும் இருக்க முடியாது! இருக்கக் கூடாது. இந்த கொடிய இரண்டு **"விஷ"** சர்ப்பங்களையும், ஏவி கடிக்கச் செய்து "எம் விஷத்தை" (கலிதோஷத்தை) செலுத்தி விடுவேன். இவ்விரண்டையும் தொடாத, **"மஹான்"** எவனும் இருக்க முடியாது என பிரமாணம் பண்ணி சொல்வதால், மேலே கண்ட எண் குணங்களைக் கண்டு விலகி, வாழ்க்கையில், **"எளிமையும்"**, எங்கு எவரிடம் பேசினாலும் வாக்கில் **"இனிமையும்"!** கொண்டு உங்கள் "தற்கவசசக்தி" மாறாமல் இருங்கள்!



2

5. உங்களுக்கு கொடுக்கப்பட்ட,
"ஆத்மஞான யோக்கியமான நூலாகிய"
"ஸ்வயஞானானுபவம்"!!
உங்கள் வினைக்கூடாகிய தூலமும் மறையும்
பரியந்தம் அவசியமாக கட்டாயமாக மிகு கவனமாக
"மனனமும்" "நிதித்யாசனமும்"!
செய்யப்பட வேண்டுமென்று எம் அன்புக் குழந்தைகள்,
அனைவரின் திருவடிகளிலும் சாஷ்டாங்க தெண்டனிட்டு,
மிகவும், மிகவும், மிகவும், மிகவும், மிகவும், பணிந்து,
கேட்டுக்கொள்கிறோம்!

6. பிறரை நோக்காதீர்! குற்றம் குறை பார்க்காதீர்!
எதையும் வெறுக்க வேண்டாம், விரும்பவும் வேண்டாம்!
இருப்பதில், கிடைப்பதில், நடப்பதில், இது "இறை
கருணை" யென அமைதியாக ஆனந்தமாக, எந்த
விசாரமுமின்றி ஏற்கப் பழகுங்கள்!

7. திரு அண்ணாமலை யென்று, எம் மலை வலம் வரும் அன்பர்
கள் அனைவரும், வேறு எந்த எண்ணமும், வேண்டுதலும் இன்றி
இறை, குரு நாமஸ்மரணை ஒன்றை மட்டும், ஸ்மரித்து
அண்ணாமலை வலம் செய்யுங்கள்! கலிதோஷ விருத்தி
யாகிய, "தேவையற்ற, ஆசையுற்ற" பிரச்சனைகள்!

கேட்டு, கேட்டு, அவஸ்தைகளையும், கஷ்டம், கவலை, துக்கம்
பயம் இவைகளையும், நீங்களே வலிய வாங்க வேண்டாம்!



உ

8. ஸ்வய ஞான அனுபவ பாராயண காலங்களில். இயலவில்லையே யென, "சோர்வு" வேண்டாம்! தூக்கம் அதிகம் வருகிறதே என, "தூக்கம்" வேண்டாம்! நம்மால் முடியுமா! என்ற "சந்தேக நிலையில்", "பயமும்" வேண்டாம்! "நம்மால் முடியும்" என "திட உணர்வு" கொள்ளுங்கள். உங்கள் சிரத்தையின் "கவனம்", உங்களை அறியாமலேயே உங்கள் உள்முகமான, "அறிவுக்கண்ணை"!!!! அவஸ்யம் திறக்கும்! (யாம் திறக்கப் பண்ணுவோம், சத்யம்)

எம் அன்பான ஞானமழலைகளே! உங்கள் திரு அன்னையாராகிய, ஸத்குருதேவரின் இந்த ஆசியுடன் இவ்விளக்கம் முடிவடைகிறது!

"மனோநலமும், ஆத்மசுகமும்" பெற வாழ்த்தும் இப்படிக்கு!

"திரு அன்னையார்"!!

ஸ்ரீ குருதேவர் இயக்க இது காவியரங்கம், இயங்கிய எழுதுகோல், தன் பணியை முடிக்கிறது!

எல்லாம் ஒன்றே! அதுநவமே!

பாபா.

அது சிவமே! அது யாமே!

அது நீங்களே! இது ஸத்தியம்! இது ஸத்தியம்! இது ஸத்தியம்!



(ஸத்திய வாக்கை)

ஸத்தியம் பேசு, ஓம் தர்மம் செய்.
நாவை அடக்கு, கருணையோடு இரு.
"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்"!

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெய ராம்"; ஓம் !!!
"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்!"
"ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை"!

"அன்பு" மயமான அன்பின் குடில் குழந்தைகளே!
"ஆனந்த" மயமான ஆனந்தாஸ்ரம குழந்தைகளே!!

அனைத்திலும் இறைவனை உணர்ந்தால் அது "அன்பு"! லௌகீக விஷய (விஷம்) ஆனந்தம் விட்டால் அது முழுமையான "பேரானந்தம்"! மேலே கூறிய "அன்பும்", "ஆனந்தமும்" இணைந்தால் அங்கு உடல் உலக நாமரூபங்களும் இல்லாது ஒழியும்! நம்முள்ளும், அனைத்துள்ளும், அனைத்து இயக்கமும், இறைவன் இயக்கமே ஆகவே அங்கு "ஜீவபாதை" இல்லையென அறிவுபூர்வமாக உணர்வுபூர்வமாக உணர்ந்து "நம் இறைவனும், நாமும்" ஒன்றேயன்றி இரண்டல்ல ஒன்றே என உணர்வுபூர்வமாக உணர்ந்து கொண்டால் அது "பிரம்மானந்தமே"! அந்த தெய்வீக அன்பும், பேரானந்தமும் இனிய உங்கள் அனைவரையும் வாழ்த்தி ஆசி கூறுகிறேன்!

உ



# "இரும்பு ஊசியும்" "தங்க ஊசியும்"!!

அன்புமயமான எம் ஆனந்தகுழந்தைகளே!
இவ் ஊசிகளின் பொருளை முதலில் கூறிவிடுகிறோம்.
ஊசி என்றால் இரண்டை ஒன்றாக பிணைப்பது!
ஊசி என்றால் கிழிந்ததை பிணைத்து ஒன்றாக்குவது!

1. "ஊசி" என்றால் "மனம்"!
2. இரண்டு துண்டுகள் என்றால் "புண்ணிய பாவம்"!
3. இரண்டை பிணைக்கும் நூல் என்றால் "மனஎண்ணம்"!

இந்தமனதிற்கு நான்கு வடிவம் கொடுக்கலாம். மனம், புத்தி, சித்தம், அஹங்காரம். இதன் விளக்கம் முந்தைய மடல்களில் கொடுத்திருக்கிறோம். ஆனால் இந்தமடலில் மனம் என்றும் புத்தி என்றும் (எண்ணம் & கற்பனை) என இரண்டை மட்டுமே எடுத்துக் கொள்வோம்.

உலகியல் கர்மாவானது புண்ணியபாவம் என சொல்லப்படும்!
தெய்வீக கர்மாவானது தர்மா தர்மம் என சொல்லப்படும்!
(தர்மம் அதர்மம்)

உடல், உலக, உறவு, சொந்த, பந்த, பாச, "உணர்ச்சிகளின்" நிலையில் அமைந்த "குணதோஷங்களாக" செய்வது புண்ணியமும் பாவமும் என்று பேசப்படுகிறது
தெய்வீக நிலையில் பூஜை, அபிஷேக ஆராதனை, பஜனை நாம வழி தேவ தெய்வ வழிபாட்டு முறைகள், சேவை, தான தர்மம், இன்னும் அனேக ஸத்காரியங்கள் தெய்வீக உணர்வின் நிலையில் ஏகுணமாகிய "ஸத்வகுணமாகச்" செய்வது தர்மம் அதர்மம் என பேசப்படுகிறது.



உ

மேலே கூறிய உலகியல் காரியங்கள் அனைத்தும் "பற்றுதலோடும், நான், என்னால், என்னுடையது" என்ற அஹங்கார அதிகார அபிமானங்களால் செய்யப்படுவதால் அதன் பலன் புண்ணிய பாபம் என இருவினைகளாக அந்த ஜீவனைப் பற்றிக் கொள்கிறது. அதற்கு அனேக பிறவிகளும் நிலை அறிந்து ஈனமான பிறவியும் உண்டு!

மேலே கூறிய தெய்வீக நிலையில் ஸத்வ குணமாகச் செய்தாலும் அதுவும் "தெய்வீக கர்மாதானே"? ஆனால் அங்கு இதைச் செய்பவன் ஏதேனும் "ஓர் சிறிய பலனை" கருதிச் செய்தாலும் அவை தர்மம், அதர்மம் என வடிவெடுக்கிறது. ஆனால் பலன் கருதாது, இறைவன் பொருட்டு இறைவனே இறைவனுக்குக் கொடுக்கிறான் என்ற நிலையில் "சர்வார்ப்பணமாக" செய்வானாயின் கர்மாவும் இல்லை! பிறவியும் இல்லா தொழியும். ஆனால் இந்த நிலையில் "இக்கலியில்" எவரும் ஏற்கவும் முடியாது! செய்யவும் முடியாது! இது பிரமாண உண்மை! அப்படி ஓர் சிறிய பலன் கருதிச் செய்யும் அந்த ஸத் கர்மாவானது, "உயர்ந்த பிறவியை" கொடுக்கும். அல்லது மேலான "சொர்க்காதி பதமுக்தியை" கொடுக்குமே யல்லாது, பிறவா நிலையாகிய "பரமுக்தியை" (ஜீவன் முக்தியை) கொடுக்கவே மாட்டாது.

ஓம் அன்புமயமான ஆனந்தக் குழந்தைகளே!

யாம் மேலே கூறிய புண்ணிய பாபங்களும், தர்ம அதர்மங்களும், பற்றுதல் இல்லாமல் சர்வார்ப்பணமாக எவரும் செய்ய இயலவில்லை. இனி அது முடியாத காரியம் என்றே சொல்லலாம். மேலும் மேலும் இந்த "கலி தோஷ மஹிமையால்" குடும்பமோ, கோயிலோ, மடங்களோ, ஆஸ்ரமங்களோ! வேத பாட சாலைகளோ அனைத்து தர்ம ஸ்தாபனங்களும் அனைத்துமே

**வியாபாரம், விளம்பரம், ஆடம்பரம்**

(ஏதாவது பலன், உலகம் தன்னைப் பாராட்ட வேண்டும், விமர்சன ஆவல்) என ஆகிவிட்டது. அதைக் கண்டு நீங்கள் அனைவரும்



உ

கலங்கவேண்டாம், சந்தேகிக்கவேண்டாம்,
மயங்கவேண்டாம், தயங்கவேண்டாம்,
பயம் கொள்ள வேண்டாம், துக்கம் வேண்டாம்,
சோர்வுற வேண்டாம், சலனமடைய வேண்டாம்,
அயர்வுற வேண்டாம், பதற்றம் வேண்டாம்,
உங்கள் **“நம்பிக்கை”** அவசியம்
**“உங்களை ரட்சிக்கும்”!!!!!**
நம்பிக்கையின் சொரூபமே **“ஸ்ரீ ஸத்குரு”!**
நம்பிக்கையின் சொரூபமே **“ஸ்ரீராம்”** மந்திரமாகும்!

உலகையும், உடலையும், உறவையும், சொந்த பந்த பாசங்களையும்
தள்ள **“வைராக்கியம்”** வேண்டும்!
உலகையும், உடலையும், உறவையும் சொந்தபந்த பாசங்களையும்
அழித்தெறியும் ஸ்ரீஸத்குருவும் ஸ்ரீபரமாத்மாவும் நமக்கு ஒன்றாக
இணைந்திருக்கிறார்கள் என்ற **“நம்பிக்கை”** வேண்டும்!

இந்த இரண்டும் உங்களிடம் நிறைந்திருக்கிறதென
யாம் பிரமாணமாக சொல்வோம்!
காரணம்?

**“நீங்கள் அனைவரும் எம்”**
**“குழந்தைகள்”!!!**

தொட்டவரை விட்டதில்லை, விட்டவரை தொட்டதில்லை. புலிவாயில்
சென்றமாமிஸம் எப்படி திரும்பா நேர அதேநிலைதான் உங்கள் அன்பர்களின்
நிலையும் [illegible]



உ

# கருத்து!

அன்பும் ஆனந்தமும் நிறைந்த குழந்தைகளே!
இதன் கருத்து என்னவென்றால் துண்டுபட்டும்
போனவைகளையும் கிழிந்து உதவமுடியாமல்
போனவைகளையும் துண்டை ஒன்றுச் சேர்த்தியும்
கிழிந்ததை தைத்தும் திரும்பத் திரும்ப ஜன்மா எடுக்கிறீர்களே
இது தேவையா? துண்டுபட்டுப்போனதும், கிழிந்ததும் இவைகளை
இனி புரிந்தது (அணிந்தது) போதும் என ஏன் உங்களுக்குத் தெளிவு
வரவில்லை? இதை நன்கு கவனியுங்கள்!

உங்கள் மனமே ஊசியாகும். அதில் கோர்த்து இருக்கும் நூல் உங்கள் மன எண்ண கற்பனையாகும். அந்த கற்பனையை வைத்துக் கொண்டு புண்ணிய பாபங்களை உங்கள் "உடைமை" (நான் என்னுடையது என) பாவனையாக எண்ணி திரும்பத் திரும்ப பிணைந்து இதை விட்டுவிட்டால் வாழமுடியாதே என்ற "ஜகவாச பழக்க வழக்க தோஷத்தால்" நீங்களே புரிந்து கொண்டால் அதற்கு இறைவனும் பொறுப்பாகான். ஸ்ரீமஹான்களும் பொறுப்பாகார்கள். உலகியல் கர்மாவின் நியதியில் புண்ணிய பாபங்களை, இவை இன்னது எனத் தெரியாத் தன்மையில் மேலும் பிறவிகளை எடுத்து அவதியுறுகிறீர்கள்!
தெய்வீக இயக்கத்திலும் இன்னது செய்கிறோம், இப்படி ஆகும் என்ற விபரம் தெரியாமல் "**தெய்வீகமயக்கத்தில்**" மயங்கி, மேலான பிறவிகள் என்ற "**பொன்பொம்மை**"யாகவும், கைலாயம், வைகுண்டம் சொர்க்கம் என்றும் உங்கள் புண்ணிய கர்மாவின் காரண காரியங்களாகிய "**சூட்சம பொம்மை**"யாகவும், பிறவியெடுத்துக் கொள்கிறீர்களே. இது நியாயமா? இது முறையா? இது தர்மமா?



உ

உலகியல், சொந்த பந்த, உறவு, தோஷங்களால் கிடைக்கும் பிறவி நிலைகண்டு, பொருள் கண்டு, ஈனமான பிறவியும், மனித பிறவியும் ஆன "மண் பொம்மை"! என்று

நைமித்திக இயலில் ஸத்கர்மா (பூஜை, பஜனை, நாமாவளி, தானதர்மம், யக்ஞம்) செய்து அதனால் வரும் பிறவி "பொன்பொம்மை"

"சூட்சும பொம்மை"! இதில் என்ன வித்தியாசம் இருக்கிறது? அனைத்தும் "மண்" தானே? ஆகவே எம் செல்வமகவுகளே! "ஊசியே" (மனம்)

இல்லாமல் செய்து விட்டால் வஸ்திரம் ஏது? (புண்ணியபாவம்) இருதுண்டுகள் ஏது? பிணைக்கும் நூல் (எண்ணங்கள்) தான் ஏது? ஆனால் ஊசியே இல்லாமல் செய்வது சாமான்ய காரியம் இல்லை!

ஆனால் ஓர் காரியம் செய்யலாம்!

அந்த ஊசியின் காதை (ஓட்டையை) உடைத்துவிட்டால்? "காதறுந்த ஊசியும் வாராது காண் கடைவழிக்கே"! என்ற எம் ஸ்ரீபட்டினத்தடிகள் வாக்குப்படி, உங்களுடன் எதுவும் வராது! நீங்கள் நீங்களாகவே இருப்பீர்கள். அதன் வழி (ஊசியின் காதை உடைக்கும் வழி) ஒரே மார்க்கம்!

"நான், என்னுடையது என்ற அஹங்கார, அதிகார, அபிமானங்கள், இவ்வொன்றையும் விட்டொழியுங்கள்!

"எல்லாம் நீயே, எல்லாம் உன்னால், எல்லாம் உன்னுடையதே" என மாற்றிப் பழகுங்கள். அவஸ்யம் ஊசியின் காது உடைந்துபோகும். அங்கு மனமே இல்லை! வினையும் இல்லை! பிறவியும் இல்லை! அவசியம் நீங்கள் அனைவரும் ஜீவன் முக்தர்களே!

பாபா


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Adobe of Love
You are Everything!